செங்காலன் சென்.மார்க்கிறெத்தன் சுவிற்சர்லாந்து

## அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய

# சிறப்பு மலர்

சுவிற்சர்லாந்தில் நடைபெறும் அனைத்துலக இரண்டாம்
முருக பக்தி மாநாட்டை முன்னிட்டு வெளியிடப்பெறுகின்றது



வெளியீடு:
பரிபாலன சபை
அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்







ஓம் சரவணபவ
காக்க காக்க கதிர்வேல் காக்க



## அனைத்துலக முருக பக்தி மாநாடு - 2014

செங்காலன், சென்மார்க்கிறெத்தன், சுவிற்சர்லாந்து

## அருள்மிகு

## ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின்

# சிறப்பு மலர்



வெளியீடு
பரிபாலனசபை
அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்
செங்காலன், சென்மார்க்கிறெத்தன், சுவிற்சர்லாந்து

# உள்ளடக்கம்



| | | |
|---|---|---|
| 1) | பதிப்புரை -தலைவர் வே. கணேசகுமார் | III |
| 2) | ஆசியுரை - சிவஸ்ரீ ஜோதிநாதக்குருக்கள் | V |
| 3) | வாழ்த்துரை - கருணாகரன் | VII |
| 4) | வாழ்த்துரை - சதா அற்புதராஜா | IX |
| 5) | வாழ்த்துரை - சி.சரவணபவானந்தன் | XI |
| 6) | வாழ்த்துரை - சுப்பிரமணியம் | XIII |
| 7) | வாழ்த்துரை - புவனேந்திரம் | XV |
| 8) | ஆலய நோட்டீஸ் | XVII |
| 9) | ஆலய அங்குரார்ப்பணம் | XVIII |
| 10) | ஆலய அடிக்கல் நாட்டு விழா | XIX |
| 11) | ஆலய கும்பாபிஷேகம் | XX |
| 12) | குடமுழுக்கு வாழ்த்து - நற்பணி மன்றம் | XXI |
| 13) | ஆலயம் தோன்றிய வரலாறு | 01 |
| 14) | ஆலய வளர்ச்சியும் எதிர்காலமும் | 04 |
| 15) | இறையுணர்வை ஏற்படுத்திய வெள்ளைமயில் வருகை | 06 |
| 16) | முருகனை ஈர்க்கும் மயில் | 09 |
| 17) | இறெயின்தாளர் மயில் பத்திரிகை | 11 |
| 18) | மயில் விருத்தம் | 12 |
| 19) | இன்னல்படும் தாயக உறவுகளுக்கு... | 21 |
| 20) | பத்திரிகைக்கண்ணோட்டம் | 27 |
| 21) | கட்டுரைகள் | 37-93 |
| | சமயப் புரட்சி செங்காலன் ஆலயம் | |
| | ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தின் அரும்பணிகள் | |
| | அருள் வாரி வழங்கும் கதிர்வேலாயுதன் | |
| | முருகனும் கந்தஷஷ்டி விரதமும் | |
| | கந்தபுராணம் காட்டும் வேல் வடிவம் | |
| | திருப்புகழ் | |
| | இறைவன் அவனே முழுமுதற் கடவுள் | |
| | வேலும் மயிலும் | |
| | சித்தர்கள் வாழ்வில் முருகக் கடவுள் | |
| | அல்லற்படுவோருக்கும் உதவும் கதிர்வேலன் | |
| | குழகனின் குறும்புகள் | |



# பதிப்புரை

சென்மார்க்கிறெத்தன் பதியில் எழுந்தருளியிருக்கும் கதிர்வேலாயுத சுவாமியின் அருளாசியுடனும் மலேசியா திருவாக்கு திருபீடத்தின் அனுசரணையுடனும் சுவிற்சர்லாந்தில் மே மாதம் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் நடைபெறும் அனைத்துலக முருக பக்தி மாநாட்டில் எமது ஆலயத்தின் சார்பில் சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுவதில் நாம் பெருமையடைகிறோம்.

சர்வதேச மட்டத்தில் இரு வருடங்களுக்கு ஒரு தடவை இடம்பெறும் இந்த அனைத்துலக மாநாட்டை இந்த வருடம் எமது ஆலயத்துடன் இணைந்து நடாத்த முடிவு செய்யப்பட்டு என்னிடம் மாநாட்டை நடாத்துவதற்கான செங்கோல் வழங்கப்பட்டது. இந்த மாநாட்டை இங்கு நடாத்த எடுத்த முடிவையிட்டு எமது நாட்டில் வாழும் சைவ மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். சைவ மக்களிடையே எழுச்சியையும் உத்வேகத்தையும் இந்த மாநாடு ஏற்படுத்தியுள்ளது.



இந்த நாட்டில் வாழும் 48 ஆயிரம் புலம் பெயர்ந்த சைவ மக்களின் பங்களிப்புடன் இந்த மாநாட்டைச் சிறப்பாக நடாத்தி முடிக்கப் பாடுபடுகின்றோம். அவர்கள் எமக்கு பக்கத்துணையாக நிற்கின்றனர். இந்த மாநாட்டின் வெற்றி இந்த நாட்டில் புலம் பெயர்ந்து வாழும் சைவ மக்களுக்கு உரியதாகும்.

இந்த சர்வதேச மாநாட்டில் எமது ஆலயம் சார்பில் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட எமது நிர்வாகம் விரும்பியது. அந்த மலர் எமது ஆலயத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டுமென விரும்பினோம்.

எமது ஆலயத்தின்மூலம் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள், இந்த நாட்டில் வாழும் சுவிஸ் பிரஜைகளுக்கு சமய நெறியைப் போதிக்கும் பணிகள், இளம் தலைமுறையினருக்கு சமயக் கல்வியின் அவசியத்தை உணர்த்தும் செயற்பாடுகள் போன்ற விபரங்களை இந்த மலரில் உள்ளடக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

முருக பக்தி மாநாட்டின் ஊடாக எமது ஆலயத்திற்குக் கிடைக்கும் பெருமை ஆலய வளர்ச்சிக்கு உதவும் என நம்புகிறோம். இந்த மாநாட்டு வெற்றிக்கு எமது ஆலய வளர்ச்சிக்கு செங்காலன் வாழ் சைவ மக்கள் மட்டுமல்லாது சுவிஸ் முழுவதும் வாழும் சைவ மக்களும் உறுதுணையாக இருக்க வேண்டும் என வேண்டி நிற்கிறோம்.

ஆலயம் படிப்படியாக முன்னேறி பெரும் திருப்பணிகள் பூர்த்தியாக கதிர்வேலாயுத சுவாமியின் பாதம் தொழுது விடை பெறுகிறேன்.

ஓம் சரவணபவ

முருகன் பணியில்

**வே. கணேசகுமார்**

தலைவர்,

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், செங்காலன்,

சென்மார்க்கிறெத்தன், சுவிற்சர்லாந்து.



# ஆசியுரை

## செங்காலன் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய அருட்பெரும் வளம்

சைவமும், தமிழும் இன்று உலகம் முழுவதும் பரவி உள்ளது. புலம் பெயர்ந்து வாழும் சைவ அன்பர்கள் சென்ற இடமெல்லாம் ஆலயப் பணி செய்து வழிபாட்டுப் பாரம் பரியத்தை வளர்த்து வருகிறார்கள். அந்த வகையில் சுவிஸ் நாட்டில் செங்காளன் பகுதியில் கதிர்வேலா யுத சுவாமி கோயில் 05.11.2005 ஆரம்பிக்கப்பட்டு 01.04.2007 அன்று கும்பாபிஷேகம் நடை பெற்று ஒன்பது வருடங்கள் நிறைவாகி உள்ளது. பல அருள் பணிகளும், அறப்பணிகளும் ஆற்றிவரும் எமது ஆலயம் விழாக்கள், விரதங்கள் ஆகிய வற்றை குறைவற நடாத்தி வருகிறது. பல்வேறு சமயப்



பெரியோர்கள், ஆதீனங்கள், சந்நிதானங்கள் என்போர் வருகை தந்து ஆன்மீகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளனர்.

இளைய சமுதாயத்தினர் பண்ணிசை சங்கீதம், சொற்பொழிவு முதலியவற்றில் முழு ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் எமது தாய்நாட்டில் துன்பப்பட்டு இருக்கும் உறவுகளுக்கும் உதவி செய்து வருகின்றமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்

பெற்றான் பொருள்வைப் புழி

என்ற வள்ளுவன் வாக்கிற்கு ஏற்ப நாம் உழைக்கும் பணத்தில் சிறிதளவாவது தான தர்மத்திற்கு செல்லவேண்டும் என்ற நல்லெண்ணச் செயற்பாடுகள் செங்காலன் கதிர்வேலாயுத சுவாமி அன்பர்களுக்கு என்றும் உண்டு. இவ்வாறு பல தொண்டாற்றும் இவ்வாலயம் மகுடம் சூடியது போல் அமைவது முருக பக்தி மாநாடு. இந்த மாநாடு சிறப்புறவும் எமது ஆலயம் பல்வேறு பணிகளில் பொலிவடையவும் முருகப் பெருமானின் பாதக் கமலங்களை மனமுருக வேண்டி இவ்வாலயம் ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை இணைந்த, அனைத்து நிர்வாகத்தினர், உபயகாரர்கள், அன்பர்கள் அனைவருக்கும் ஆறுமுகன் அருள் கிடைத்து நீண்ட ஆயுளுடனும், ஆரோக் கியமாகவும் வாழப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவாகம ஜோதி சிவஸ்ரீ பா. ஜோதிநாதக்குருக்கள்**
*பிரதமகுரு,*
*ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்*



# வாழ்த்துரை

**செ**ன்மார்க்கிறெத்தன் அருள்மிகு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமியின் அருளுடன் இடம் பெறும் அனைத்துலக முருகபக்தி மாநாட்டில் ஆலயம் சிறப்புமலர் ஒன்றை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் பெருமையடைகிறேன்.

2005 ஆம் ஆண்டு அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயம் ஆரம்பிக்கப் பட்டதில் இருந்து ஆலய பரிபாலனசபைத்தலைவர் வே. கணேசகுமாருடன் கைகோர்த்து, தோளோடு தோள்நின்று ஆலய வளர்ச்சிக்கு என்னால் ஆன உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றேன். மேலும்



இந்த ஆலயம் வளர்ச்சி பெற்று, இந்த மாநில மக்களுக்கு அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி அருள்புரிய எனது பணிகள் தொடரும்.

ஆலயம் வளர்ச்சியடைந்து வரும் இந்தக் காலகட்டத்தில் சர்வதேச பிரதிநிதிகள், ஆதீனங்கள், புத்திஜீவிகள், சமயப்பெரியார்கள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று இங்கு நடைபெறுவது ஆலய வளர்ச்சிக்கு பெரும் உந்து சக்தியாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

மாநாடு வெற்றிபெற கதிர்வேலாயுதனின் தாள் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

இறைபணியில்

**க. கருணாகரன்**

செயலாளர்,
அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்,
சென்மார்க்கிறெத்தன், சுவிஸ்



# வாழ்த்துரை


## கந்தா கதிர்வேலா உனைக் கண்டோம் களி கொண்டோம்

சுவிற்சர்லாந்து வாழ் புலம்பெயர் சைவ மக்களுக்கு வேண்டுவன எல்லாம் வழங்கி அருள் சுரக்கும் கதிர்வேலாயுதன் காலடியில் இந்த மலரை சமர்ப்பணம் செய்வதில் பேருவகையடைகிறோம்.

சுவிற்சர்லாந்தில் செங்காலன் மாநிலத்தில் சென்மார்க்கிறெத்தன் பதியில் நடைபெறும் அனைத்துலக முருகபக்தி மாநாட்டில் எமது ஆலயத்தின் சார்பில் சிறப்புமலர் ஒன்றை வெளியிடுவதில் நாம் பெருமையடைகிறோம் .

2005 ஆம் ஆண்டு சென்மார்க்கிறெத்தன் பதியில் எழுந்தருளி அருட்கடாட்சம் புரிந்து கொண்டிருக்கும் கதிர்வேலாயுதனின் பெருமைகளையும் அற்புதங் களையும் பணிகளையும் பதிவில் கொண்டுவர இந்த மலர் உதவியமைக்காக மகிழ்வு அடைகிறோம்.

ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டு 9 ஆண்டு காலத்தில் ஆலயத்தின் வளர்ச்சி பெருமை அளிக்கின்றது. சென்மார்க்கிறெத்தன் பிரதேசத்தை மட்டும்



மையப்படுத்தி செயற்பாடுகளை ஆரம்பித்த ஆலயம் இன்று பல்கிப் பெருகி முழு சுவிஸ் நாட்டு மக்களுக்கும் தனது பணிகளை விஸ்தரித்து உயர்ந்து நிற்கிறது.

சுவிஸ்நாட்டில் மட்டுமல்லாது தாயகத்தில் இன்னல்ப்படும் மக்களுக்கு கைகொடுக்கும் இணைப்புப்பாலமாக ஆலயம் உயர்வடைந்துள்ளமை மகிழ்ச்சி தரும் ஒரு விடயமாகியுள்ளது. இன்று நடை பெறும் அனைத்துலக முருகபக்தி மாநாடு ஊடாக ஆலயத்தின் பெருமைகள், சிறப்புகள் உலகம் வாழ் சைவ மக்களிடம் செல்ல வாய்ப்புக் கிட்டியுள்ளது. எதிர்காலத்தில் இந்த ஆலயம் சைவ மக்களின் எழுச்சிக்கும் உயர்வுக்கும் தனது பங்களிப்பை வழங்கக்கூடிய வகையில் இந்த மாநாட்டை ஆலயம் நடாத்துவது சுவிஸ் வாழ் சைவ மக்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும்.

இந்த மாநாட்டில் எமது ஆலயம் சார்பில் வெளியாகும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமை அடைகிறேன்.

முருகனடியில்

**சதா அற்புதராஜா**

*பொருளாளர், ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயம்,*
*செங்காலன், சென்மார்க்கிறெத்தன், சுவிஸ்.*



# வாழ்த்துரை

சர்வதேச மட்டத்தில் முருகபக்தி மாநாடு ஒன்று சென்மார்க்கிறெத்தன் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலா யுதசுவாமி ஆலயத்தில் இடம்பெறுவது இந்தப் பிரதேச மக்களுக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும்.

அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தின் அனுசரணை யோடு நடாத்தப்படும் இந்த மாநாட்டில் எமது ஆலயம் சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுவது சிறப்பான ஒரு விடயமாகும். இந்த மலரின் எனது வாழ்த்துச்செய்தியும் இடம்பெறக் கிடைத்த வாய்ப்பை யிட்டு மகிழ்ச்சி யடைகிறேன்.

2005ஆம் ஆண்டு சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயம் வே. கணேசகுமார் தலைமையினாலான பரிபாலனசபையால் சிறப்பாக வளர்க்கப்பட்டு வருகிறது. ஆலயம் மேலும் மேலும் வளர எனது ஒத்துழைப்பு என்றும் இருக்கும்.



ஆலயம் பெரிய அளவில் வளர்ந்து இந்தப் பிரதேச மக்களுக்கு ஆன்மீகப் பற்றை வளர்க்கவேண்டும். அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியின் அருட்கடாட்சம் சகலருக்கும் கிட்ட இறை பணிந்து வாழ்த்துகிறேன்.

அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியின் அருளால் இங்கு நடைபெறும் அனைத்துலக முருகபக்தி மாநாடு வெற்றிபெற கதிர்வேலாயுதனின் தாள் பணிந்து பிரார்த்திப்போம்.

இறைபணியில்

**சீ. சரவணபவானந்தன்**

*முன்னாள் பொருளாளர்,*
*அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்,*
*சென்மார்க்கிறெத்தன், சுவிஸ்.*



# Muruga Bhakti Conference 2014

Om Sharavana Bhava

Diese worte lehrte mich mein Bruder im Geiste, Sri Sharavana Baba, vor einigen Jahren. Wie ein Vater seinen Sohn benennt, flusterte mir Babaji meinen tamilischen Namen ins Ohr. Der Name Subramaniyam sowie das Mantra Om Sharavana Bhava werden mich fur den Rest dieses Lebens begleiten und verbinden mich mit den Werten des Sanatana Dharma.

Durch meinen grossen Bruder, Ganeshakumar Velupillai, fand ich nach langer Suche auf den Weg, welchen wir nun gemeinsam begehen. Wie ein Licht in der Dunkelheit,



verhinderer, dass meine Schritte vom sicheren Pfad abkommen. Durch sein unbegrenztes Wissen fuhrt er mich standig zu neuer Erkenntnis.

Im Vertrauen auf sein Wissen und seinem konnen, sowie in der Gewissheit auf den segen seiner Heiligkeit Balayogi Swamigal, bin ich vom Gelingen und vom Erfolg der Muruga Bhakti konferenz 2014 in St. Margrethen uberzeugt.

Die kraft der Muruga Bhakti konferenz 2014 wird, wie der heilige vel, auf der ganzen welt als zeichen fur die gottliche kraft murugas wahrgenommen, und in den Herzen der Teilnehmenden auf alle kontinente heimgetragen werden.

Meine lieben Bruder und schwestem, aus ganzem Herzen und Geiste wunsche ich uns eine gesegnete und erleuchtende konferenz unter dem schulz murugas in der schweiz.

Om Sharavana Bhava

**R. Subramaniyam**
*Public Relations Adviser*
*Arulmigu Sri Kathirvelautha Swamy Aalayam*



# வாழ்த்துரை

ஈழத்தமிழர்களாகிய நாங்கள் புலம்பெயர முன்னர் எமது தாய்நாட்டில் எப்படியெல்லாம் வாழ்ந்தோம் என்பதற்கு பல வரலாற்று சான்றுகள் உண்டு. கிடுகுவேலி மற்றும் வடலி ஓலையின் மறைப்பிலும் உன்னதமான உயர் கலாசார விழுமியங்களைக் கொண்டு வாழ்ந்து வந்திருக்கிறோம். நாகரீக வளர்ச்சியும் சமநிலையற்ற பொருளாதார வருவாய்களினால் ஏற்றத்தாழ்வுகள் உருவாகியிருந்தன அது உண்மைதான்.



முதலாவதாக மண்ணை விட்டு வந்தோம். சொந்தமண் பறிபோய்க் கொண்டிருக்கிறது. எமது பிள்ளைகளுக்கு மண்ணும் இல்லை மொழியும் இல் லை என்ற நிலை உருவாகின் றது. அடுத்த எமது சந்த திப் பிள்ளைகள் இன அடை யாளமற்ற சந்ததியை உரு வாக்கி வருகின்றோம் என் பது வேதனை தருகின்ற விடய மாகும்.

ஆனால் எமது இறை வழிபாட்டில் மட்டும் தொடர்ச்சியான வழிமுறைகளை பின்பற்றி வருகின்றோம். வேத ஆகம முறைகளை சரிவரப் பின்பற்றாமல் விட்டாலும் எமது சமய இறை வழிபாட்டைப் பின்பற்றி வருகின்றோம். இதை பயமா பக்தியா என்று இதுவரை என்னால் நிரூபிக்க முடியாமல் இருக்கின்றது.

இருந்தாலும் எமக்கு ஒரு வழிபாட்டுத்தலம் தேவை என்பதனை உணர்ந்த நாங்கள் வாடகைக் கட்டிடங்களில் இறைவனை வழிபட்டு வரவேண்டிய சூழ்நிலை உருவானது. தற்சமயம் சொந்தமாகவும் நிலங்கள் பெற்று கோயில்கள் கட்டி வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

அந்த வகையில் சுவிற்சர்லாந்தில் செங்காலன் மாநிலத்தில் தமிழ் மக்களின் ஒத்துழைப்புடன் தமிழர் நற்பணி மன்றம் உருவானது. ஆரம்பத்தில் திரு. வே. கணேசகுமார் தலைமையில் உருவாக்கப்பட்டது. மக்களின் வழிபாட்டிற்கு இம் மன்றத்தினூடாக வாடகைக் கட்டிடத்தில் கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் திறந்து வைக்கப்பட்டது. சுவிற்சர்லாந்தின் பல மாநிலங்களில் கோயில் அமைத்து வழிபட்டு வருகின்றபோதும் செங்காலன் மக்கள் இறைவனைத் தரிசித்து வழிபட கோயில் இல்லையே என்ற குறை இருந்தபோதுதான் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத் தோற்றத்தால் மக்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார்கள். வெள்ளிக்கிழமை தோறும் மற்றும் விசேட தினங்களிலும் மக்கள் ஆதரவுடன் திருவிழாக்களும் பூசைகளும் நடைபெற்று வருகின்றது. அருகிலுள்ள மாநில மக்களும் வந்து தரிசித்து செல்கின்றார்கள். ஆலயம் அமைத்து செயற்படுவதால் எமது குழந்தைகளுக்கு ஆத்மிக சிந்தனைகளை வளர்ப்பதுடன் அவர்களுக்காகத் தேவார திருவாசகங்களை இசையுடன் பாடக்கூடியதான நிலை உருவாகிக் கொண்டிருக் கிறது. மேலும் சமயப் பெரியார்களை வரவழைத்து அரும்பெரும் நல்ல கருத்துக்களை சொற்பொழிவுகள் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றன. அத்துடன் யோகப்பயிற்சியும் நடைபெற்று வருகின்றது.

கோயில் நிர்வாகத்தின் மூலம் தாயக தமிழ் உறவுகளுக்கு உதவிக்கரங்களும் நீட்டப்படுகின்றன. அதாவது விதவைப் பெண்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களும் வசதி குறைந்து மாணவர்களுக்கு கல்வி தொடர்வதற்கு பாடப்புத்தகங்கள், உபகரணங்கள் வழங்கி இன்னோரன்ன பல வசதிகளையும் செய்து வருகின்றார்கள்.

2014 ஆம் அண்டு செங்காலன் கதிர்வேலாயுத சுவாமி ஆலய நிர்வாகத்தினூடாக சர்வதேச இரண்டாவது முருகபக்தி மாநாடு நடைபெற இருப்பது எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருத வேண்டியுள்ளது.

**இ. புவனேந்திரன்**
*உபசெயலாளர்,*
*செங்காலன் நற்பணி மன்றம்*

உ
சிவமயம

"விழிக்குத்துணை திருமென்மலர்ப்பாதங்கள் மெய்மைகுன்றா

மொழிக்குத்துணை முருகா என்னும் நாமங்கள் "

செங்காளன்

# அருள்மிகு கதிர்வேலாயுதசுவாமி ஆலயம்

சென்மார்க்கிறெட்டன்

## அன்பான செங்காலன் வாழ் நம் தமிழ் உறவுகளே!

செங்காலன் வாழ் தமிழ் உறவுகளுக்கு நற்செய்தியையும் உளங்கனிந்த அன்பான வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

அன்பான நம் தமிழ் உறவுகளின் ஆன்மீக ஆத்ம தரிசனத்தையும், வளர்ந்துவரும் எமது வருங்கால இளம் சிறார்களின் எதிர்கால நல்வாழ்வையும், நல்வழியில் ஒருங்கிணைந்து நெறிப்படுத்துவது ஆலய வழிபாடும், ஆன்மீக ஒன்றுகூடலும், ஆத்ம தரிசனமுமே என்பதை நாம் எல்லோரும் அறிந்த உண்மையே. எமது கலை, கலாச்சாரம், பண்பாடு சிதைவடையாமல் எங்கள் வாழ்வின் பின் தொடர்ந்தும் எமது வருங்கால சந்ததியினூடாக நம் பாரம்பரியம் வேரூன்றி விழுதாக வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். எல்லா மனித பிறப்புகளையும் சாந்தமாக நெறிப்படுத்தி பண்பு நிறைந்த வாழ்வைத் தருவது ஆலயம் தொழுதல் என்பதே எம் போன்று நமது இனமும் எங்களது வருங்கால இளம் சந்ததியினரும் பின்பற்றி தொடர்ந்து முன் எடுத்துச் செல்வதற்கு நாமே வழிகாட்ட வேண்டும். அது தார்மீகக் கடமையாகும். வாசிப்பதாலும் தரிசிப்பதாலும் மனிதன் பூரணமடைகின்றான் என்ற உண்மையும், தண்ணீர் இல்லாமல் போனால் பயிர் வாடிப் போகும் என்பதுபோல ஆன்மீகம் அற்றுப் போனால் உயிர் மாறிப் போகும் என்பது நியதி. ஆலய வழிபாடும் ஆன்மீக சக்தியும் வாழ்வில் ஒரு முக்கிய அம்சம். இதன் காணிக்கையாகவே ஆண்டவன் அருள் பாலிப்புடன் நம் அருகில் ஆலயம் அமைவது எமக்குக் கிடைத்த தரிசனமும் பாக்கியமுமாகும். இவ்வரிய வாழ்வையும் சந்தர்ப்பத்தையும் உரிய முறையில் உள்வாங்கிப் பயன் படுத்துவதனால் நம் சிறார்களின் வாழ்வை சிறப்புடையதாக நிர்ணயமாக்குவோம்.

நம்மினிய உறவுகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இவ் ஆலயத் திருப்பணிச்சேவையை சிறந்த முறையில் முன்னெடுத்து ஆலயத்தைப் பூரணப்படுத்தி ஆண்டவன் அருளை வேண்டி நிற்போம். இது மட்டுமன்றி இவ் ஆலயத்தினூடாக பல நற்பணிகளையும் பயன்பெறும் பல பொறுப்புக்களையும் தாங்கி நிற்கின்றது என்பதையும் தெரிவிக்கிறது. இவ்வாலயமானது பக்க சார்பற்றதாக நியாயமாக நமது நாட்டில் கஸ்டப்படும் மக்களுக்கு உதவும் என இதய சுத்தியுடன் கூறிக் கொள்கின்றது.

இவ்வாலயமானது மிகச் சிறந்த செயற்பாட்டாளர்களாலும் புகழ் பெற்ற ஆன்மீகச் சொற்பொழிவாளர்களாலும் முன்னெடுத்துச் செல்லும் என்பதையும் பக்தர்களிற்கு அறியத் தருகின்றோம். அது மட்டுமல்ல இன்னும் பல சிறந்த சாராம்சங்களைத் தாங்கி நிற்கின்றது என்பதையும் இத் தமிழர் நற்பணி மன்றம் மனநிறைவுடனும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றது.

இதன் விடயமாக தங்கள் இல்லந்தோறும் வருகை தர காத்து நிற்கின்றோம்.

தொடர்புகட்கு:

| | | |
|---|---|---|
| வே.கணேசகுமார் (Marbach) | வெ.இராசேந்திரம் (Flawil) | ச.சண்முகதாசன் (St.Gallen) |
| 078 8783176 | 079 3264722 | 076 3248080 |

இவ்வண்ணம்

27.112005

ஆலய பரிபாலனசபை




# திருப்பரங்குன்றத்திலே

திருப்பரங் குன்றத்தில் நீ சிரித்தாய் முருகா
திருத்தனி மலைமீது எதிரொலிக்கும்
திருச்செந்தூரிலே வேலாடும் - உன்
திருப்புகழ் பாடியே கடலாடும்
(திருப்பரங்)

பழனியிலே இருக்கும் கந்தப்பழம் - நீ
பார்வையிலே கொடுக்கும் அன்புப்பழம்
பழமுதிர்ச் சோலையில் முதிர்ந்த பழம்
பக்தி பசியோடு வருவோர்க்கு ஞானப்பழம்
(திருப்பரங்)

சிறப்புடனே கந்த தோட்ட முண்டு - உன்
சிங்கார மயிலாட தோட்டமுண்டு
உனக்காக மனக்கோயில் கொஞ்சமில்லை
நீ உருவான அன்புக்கோர் எல்லையில்லை
(திருப்பரங்)

ஆலயத்தின் திறப்பைப் பெற்று Chur சித்தி விநாயகர் ஆலயத்தில் பூசை செய்யப்படும் காட்சி (2005 -ஐப்பசி )





ஜெனிவா அற்புத விநாயகர் ஆலய பிரதமகுருக்களுடன் ஆலயம் அமைப்பது தொடர்பான ஆலோசனை













ஆலய அங்குரார்ப்பணம்
























உ
சிவமயம்

"விழிக்குத்துணை திருமென்மலர்ப்பாதங்கள் மெய்மைகுன்றா

மொழிக்குத்துணை முருகா என்னும் நாமங்கள் "

செங்காளன்

# அருள்மிகு கதிர்வேலாயுதசுவாமி ஆலயம்

சென்மார்க்கிறெட்டன்





## அங்குரார்ப்பண விழா - *05.12.2005*

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

அடியார்களே கோவிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழிக்கு ஒப்பாக சுவிற்சர்லாந்து நாட்டின் செங்காளன் மாநிலத்தில் துர்க்காவ் மாநிலத்தினையும் அண்மையாகக் கொண்ட சென்மார்க்கிறெட்டன் பகுதியில் முருகப்பெருமானது ஆலயம் இறைவனது திருவருளினால் பார்த்திபவருடம் கார்த்திகைத்திங்கள் 20 ம் நாள் (05.12.2005) திங்கட்கிழமை பூர்வபட்ஷ பஞ்சமித்திதியும் திரிவோணநட்சத்திரமும் கூடிய இரவு 07.00 மணிக்கு விநாயகர், முருகன், அம்பாள் திருவுருவப் படப்பூசை வழிபாடுகளுடன் அங்குரார்ப்பண விழா ஆரம்பமாகவுள்ளது. எனவே இந்த ஆலய வழிபாட்டில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

***Industriestrasse 27***
***9430 St. Margretten***

தொடர்புகட்கு

| | | |
|---|---|---|
| வே.கணேசகுமார் (Marbach) | வெ.இராசேந்திரம் (Flawil) | ச.சண்முகதாசன் (St.Gallen) |
| 078 8783176 | 079 3264722 | 076 3248080 |

28.11.2005
சென்மார்க்கிறெட்டன்

இவ்வண்ணம்
ஆலய பரிபாலனசபை
கதிர்வேலாயுதசுவாமி ஆலயம்.

உ
சிவமயம்

## அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்
## செங்காளன், சென்மாக்கிறேற்றன்



"முருகனே செந்தில் முதல்வனே மாயோன் மருகனே ஈசன் மகனே
நின்னுடைய தணடைக்கால் எப்பொழுதும் நம்பியே கை தொழுவேன் நான்"

# மூலஸ்தான அடிக்கல் நாட்டுவிழாவும்
# ஆவணி சதுர்த்தியும்

முருகன் மெய்யடியார்களே!

சென்காளன் மாநிலத்தே சென்மாக்கிறேற்றன் கிராமத்திலிருந்து அருள்பாலிக்கும் அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திற்கான மூலஸ்தான அடிக்கல் நாட்டுவிழா நிகழும் விய வருடம் 27.08.2006 (ஆவணி 11ம் நாள்) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து 09.15 மணி வரையுள்ள சுபவேளையில், நடைபெற இறைவன் திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் முருகன் அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்குச் சமூகம் தந்து விழாவினைச் சிறப்பித்து, எம்பெருமானைத் தரிசித்து இறைவன் அருள் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்றைய தினம் தொடர்ந்து வினாயகப் பெருமானுக்கான ஆவணி சதுர்த்தியும் நடைபெறவுள்ளது. இதிலும் மெய்யடியார்கள் கலந்து வினாயகப் பெருமானின் அருள்பெற வேண்டுகிறோம்.



அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி
ஆலயத்திற்கான மூலஸ்தான
அடிக்கல் நாட்டுவிழாவிலும்,
வினாயகப் பெருமானுக்கான
ஆவணி சதுர்த்தியிலும்
மெய்யடியார்கள் அனைவரும்
கலந்து அருள்பெற்று ஏகுமாறு
அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.





Industriesstr. 27
9430 St.Margrethen SG

இவ்வண்ணம்
ஆலயபரிபாலன சபை
















# ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள்


























# அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்

# மஹா கும்பாபிஷேகம் சிறப்பு மலர்



செங்காலன், சென்மார்க்கிறெத்தன்
சுவிற்சர்லாந்து

01.04.2007







[illegible]

# அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானம்

**செங்காலன், செண்மார்க்கிறேத்தன் பதி.**

## நூதன பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

[illegible]

... (01-04-2007) ... 10.30 ...

### கிரியாகால விபரம்

28-03-2007 [illegible]

29-03-2007 [illegible]

30-03-2007 [illegible]

31-03-2007 [illegible]

01-04-2007 [illegible]

### கிரியா கால குருமார்

... சிவஸ்ரீ நா. மஹாதேவக் குருக்கள் ...

... சிவஸ்ரீ வை. ச. ஸ்ரீதரக் குருக்கள் ...

... சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள். B. A. (Hons) ...

[illegible]

[illegible]

POST KONTO, HINDU VEREIN 85-714085-9 ST. GALLEN.

அனைவரும் வருக! கதிர்வேலாயுத சுவாமி திருவருள் சிறுக!!

KATHIRVELAUTHA SUVAMY TEMPLE

INDUSTRIE STR 27, 9430, ST. MARGRETHEN, ST. GALLEN.

SWITZERLAND. [illegible]

HINDU VEREIN 9000 - ST. GALLEN

[illegible]

இவ்வண்ணம்

ஆலய பரிபாலன சபை

# குடமுழுக்கு வாழ்த்து

கதிர்வேலாயுதர் சுவாமியின் குடமுழுக்குவிழா இனிதே
நடைபெற தமிழ் நற்பணி மன்றத்தினர்களின் வாழ்த்து

சோலைகளும் மலைகளும் சூழ்ந்த சுவிற்சர்லாந்து செங்காலனில்
வேலையும் சாலையும்சுற்றி வந்த தமிழர் வாழ்வின் மத்தியில்
நிலையான நிறைவான நிம்மதி வாழ்வுபெற நிழல் தேடினார்கள்
கலையம்சம் மிக்க கோவில் ஒன்று கட்டி எழுப்ப காட்சி தந்தர் கதிர்வேலாயுத
சுவாமி


சாவிற்குப் பயந்து சரணடைந்த மண்ணில் சஞ்சலமும் சுமந்து நிற்கிறோம்
நாவின் சுவையுடன் நலமுடன் வாழ்ந்து நாற்திசையும் சென்று வந்தாலும்
கோவில் ஒன்றின் மூலம் கும்பிட்டு குறைகளைக் கூறி நிறைவு பெறுவோம்
பா ஓதி படையல் வைத்து பரிகாரம் தேடி பகிர்ந்து கொள்வோம் நாம்

பனிமலையில் தனிமையாய் வாழாது பண்போடு பாசமாய் நாம்
இனிமையான வாழ்வுக்கு இறைவனின் அருள் தேடி நிற்போம்
கனிவான கதிர்வேலாயுதர் சுவாமியின் கருணையைப் பெற்றிடுவோம்
மேனி சிலிர்க்க மெய்மறந்து மேன்மை கொள்வோம் எல்லோரும்

தாயகப் பணியாய் தமிழர் பணியாய் தன் பணியாய் தாங்கி நிற்கும்
தமிழர் நற்பணி மன்றம்
நேயமாய் தமிழர் நெஞ்சங்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதும்
தமிழர் நற்பணி மன்றம்
கோயில் ஒன்றை உருவாக்குவதில் கொள்கையில் வெற்றிகொண்டது
தமிழர் நற்பணி மன்றம்

நயமாய் கோயிலின் குடமுழுக்கு விழா இனிதே நடைபெற்றிடும் இந்நாளில்
தமிழர் நற்பணி மன்றத்தினர்கள் வாழ்த்துகிறார்கள்.

தமிழர் நற்பணி மன்றம்
செங்காலன்.





# அருள்மிகு
# ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி
# ஆலய வரலாறு




விழிக்குத் துணை திருமென் மலர்ப்பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா என்னும் நாமங்கள்

அறிவியல் வளர்ச்சியால் அதிக முன்னேற்றம் அடைந்துள்ள ஐரோப்பாக் கண்டத்தின் அழகு மகள் போல விளங்குவது சுவிற்சர்லாந்து. குறிஞ்சிக் கோலங்கள் கொலுவிருக்கும் சுவிற்சர்லாந்து நாட்டில் அவுஸ்திரியாவின் எல்லைபுறத்தில் இருப்பது செங்காலன் மாநிலம்.

இம்மாநிலத்தில் வாழ்ந்து வரும் சைவத் தமிழ் மக்கள் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் முதுமொழிக் கிணங்கத் தமக்கென ஆலயம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்தனர். தீர்மானத்தை நிறைவேற்றும் பொறுப்பு செங்காலன் தமிழர் நற்பணி மன்றத்திடம் விடப்பட்டது.

ஏனைய தெய்வத்துக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஒருமைப்பாடு



காணாதவிடத்துத் திருவுளச் சீட்டுத் தெரிவில் முருகன் பெயர் வந்ததால் முருகப் பெருமானுக்கே கோயில் கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டு கதிர் வேலாயுத சுவாமி என்னும் திருநாமம் சூட்டப் பெற்றது. இது இலங்காபுரியில் பழைமை வாய்ந்த முருகதலமாகிய கதிர்காமத்தின் பெருமையால் எழுந்த பெயராகும்.

இறைவன்திருவருளால்சென்மார்க்கிறெத்தன் என்னும் பதியில் இண்டஸ்ட்றி வீதி 27 இல் அமைந்துள்ள கட்டிடத்தில் பார்த்திப வருடம் கார்த்திகைத் திங்கள் 20ஆம் நாள் (05.12.2005) திங்கட்கிழமை திருவோண நட்சத்திரமும் பூர்வபட்ச பஞ்சமித் திதியும் கூடிய மங்கல வேளையில் இரவு 7.00 மணியளவில் விநாயகர், வள்ளி, தெய்வானை சமேத முருகப் பெருமான், அம்மன் திருவுருவப் படப் பூசை வழிபாடு தொடங்கப் பெற்றது.

திருவுருவப் படவழிபாடு நடாத்தப் பெற்று வந்த அதே கட்டிடத்தில் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா விய வருடம் ஆவணி 11ஆம் நாள் (27.08.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 9.15 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெற்றது.



ஆலய நிர்மாணப் பணிகள் இறையருளால் துரிதமாக நடைபெற்று அருள்மிகு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலய குடமுழுக்கு விழா 01.04.2007 இனிதே நிறைவேறியது.

தமிழர் கண்ட நிலப் பிரிவில் சென்மார்க்கிறெத்தன் குறிஞ்சி நிலப் பிரிவில் அடங்குகின்றது. குறிஞ்சி என்பது மலையும் மாலைசார்ந்த இடத்தையும் குறிக்கும். குறிஞ்சி நிலக் கடவுள் முருகன் ஆவார். அந்தவகையில் ஆல்ப்ஸ்மலை அடிவாரத்திலும் றைன் நதி ஓரத்திலும் முருகப் பெருமானுக்கு நாம் ஆலயம் அமைத்தது மிகப் பொருத்தமானதும் திருவருள் வழிப்பட்டதுமாகும்.





செங்காலன், சென்மார்க்கிறெத்தன் சுவிற்சர்லாந்து

வருடந்தோறும் அலங்காரத் திருவிழா வைகாசி விசாகத்தை பட்சமாகக் கொண்டு வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு 12 நாட்கள் திருவிழா இனிதே நிறைவு பெறும். இவ் ஆலயத்தால் செங்காலன் மாநிலத்தில் வாழ்ந்து வரும் மூவாயிரம் சைவத் தமிழ் மக்களின் ஆன்மீக வாழ்வு அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி அருளால் இனிது மேன்மையுறும் என்பது உறுதி.

ஆலய பரிபாலன சபை

## திருப்புகழ்
## திருப்பரங்குன்றம்

**சந்ததம் பந்தத் ...... தொடராலே**
**சஞ்சலந் துஞ்சித்..... திரியாதே**
**கந்தன் என்று ...... உனைநாளும்**
**கண்டுகொண்டு அன்புற்.... றிடுவேனோ**
**தந்தியின் கொம்பைப் ..... புணர்வோனே**
**சங்கரன் பங்கிற்..... சிவைபாலா**
**செந்திலங் கண்டிக்..... கதிர்வேலா**
**தென்பரங் குன்றிற்.... பெருமாளே.**

ஆலயம் திறக்கும் நேரம் தினசரி 18.00 - 19.00 மணி வரை
வெள்ளிக்கிழமைகளிலும் விசேட நாட்களிலும் 14.00 - 22.00 மணி வரை
விசேடநாட்களில் சிலவேளைகளில் நேரமாற்றம் இடம் பெறலாம்.
ஆலயத்துடன் தொடர்பு கொள்ளலாம்.







# ஆலய வளர்ச்சியும் எதிர்காலமும்



செங்காலன் மாநிலத்தில் சென்மார்க்கிறெத்தன் பதியில் எழுந்தருளி அருட்கடாட்சம் புரிந்து கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் கடந்த வருட காலப்பகுதியில் துரித வளர்ச்சி கண்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயத்தில் ஆரம்பத்தில் வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அக்காலப் பகுதியில் சிறிய எண்ணிக்கையினரே ஆலயத்தை நாடி வந்தனர்.


காலத்தின் தேவை கருதி ஆலயத்திற்கான அடிக்கல் 2006ஆம் ஆண்டு நாட்டப்பட்டு தனி ஆலயம் அமைக்கும் பணி ஆரம்பமானது. துரிதகதியில் திருப்பணி வேலைகள்

பூர்த்தியாகி 2007ஆம் ஆண்டு குடமுழுக்கு விழா இடம்பெற்றது. நிரந்தரமான ஆலயம் அமைந்த பின்னர் மக்களின் பங்களிப்பும் வருகையும் அதிகரித்தன.

முருகனின் அருட்கடாட்சம் ஓங்க ஓங்க பக்தர்களின் வருகையும் அதிகரிக்க மக்களின் வசதி கருதி பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இப்போது முருகனை நோக்கி வரும் பக்தர்கள் ஆலயத்தை சீராக மேலும் மேம்படுத்த உதவத் தயாராக இருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் விசேட பூஜை நடைபெற்று வந்த ஆலயத்தில் இப்போது வருடாந்த உற்சவம், கந்தஷஷ்டி உற்சவம் என்பன விசேடமாக இடம்பெறுகிறது. அத்துடன் சைவ மக்களின் விரத தினங்களில்கூட விசேட உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மடாலயதிபதிகள், ஆதீனங்கள், ஆன்மீகப் பேச்சாளர்கள், புத்திஜீவிகள் எனப் பெரும் எண்ணிக்கையாளர்கள் ஆலயத்திற்கு வந்து தரிசிக்கின்றனர்.



அவர்களின் அரிய சிந்தனையை எமது மக்களும் அறிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தமிழகத்திலிருந்தும் தாயகத்திலிருந்தும் சிறப்புக் கலைஞர்கள் வருகை தந்து காதுக்கினிய இசை கானங்களை எமது மக்களுக்கு வழங்குகிறார்கள்.

இதற்கு மேலாகப் பல்வேறு அறிஞர்கள் வருகை தந்து நூல் வெளியீடுகளையும் ஆலயத்தில் அரங்கேற்றியுள்ளனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக சுவிஸ் நாட்டவர்கள் எம்மதம் மீது நாட்டம் கொள்ளக்கூடிய சூழல் உருவாகி உள்ளது. எமது சமயத்தின் பெருமைகளை அவர்கள் அறிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.


முருகனின் திருவருளாலும் ஆலய நிர்வாகத்தின் செம்மையான பணியினாலும் ஆலயம் வளர்ச்சி கண்டு வருகிறது.

## எதிர்காலத்திட்டங்கள்

ஆலயத்துக்குத் தனியாக நிலம் வாங்கி ஆலயம் அமையவேண்டும் என்பது நீண்ட காலத் திட்டமாகும். முருகனின் அனுமதி கிடைக்கும்போது அதுவும் மக்களின் பங்களிப்புடன் நிச்சயம் நிறைவேறும் என்று நம்பிக்கை உள்ளது.

ஆலயத்தில் கொடித்தம்பம் அமைத்தல், சித்திரத்தேர் அமைத்தல் போன்ற திருப்பணிகளும் முருகனின் திருவருளுடன் நிறைவேறும் என நம்புகிறோம்.

ஆலய பரிபாலன சபை




# இறையுணர்வை ஏற்படுத்திய வெள்ளை மயில் வருகை





சுவிஸ் நாட்டிலே செங்காலன் மாநிலத்திலே றைன் நதிக்கரையினிலே மலையும் மலை சார்ந்து விளங்கும் அழகிய சென்மார்க்கிறெத்தன் பதியில் கோவில் கொண்டு வேண்டுவோர் வேண்டுவதை வழங்கி அடியார்களுக்குப் பல அற்புதங் களைக் காட்டி அருள் பாலித்துக் கொண்டி ருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கந்த ஷஷ்டித் திருநாளில் காட்டிய அற்புதம் இது.



செங்காலன், சென்மார்க்கிறெத்தன்
சுவிற்சர்லாந்து

நாள், கந்தஷஷ்டி இரண்டாவது நாள் என்றும் மயில் முருகனுடைய வாகனம் எனவும் அது இறைவனுக்கு உரியது எனவும் கூறி காவல்துறையினருக்கு விளக்கியபோது அவர்கள் அவ்வெண்மயிலை கோயிலில் வைத்து வளர்ப்பதற்கு அனுமதி கொடுத்து வெண்மயிலை கோயில் நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்தனர்.

யாராவது இந்த மயிலை உரிமை கோரினால் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்வதாகக் கூறினார்கள். ஆனால் எவரும் உரிமைகோராததால் வெள்ளைமயில் தற்போது பாதுகாப்பாக ஆலயத்தில் வளர்க்கப்பட்டு வருகிறது. வசந்தமண்டப் பூசை நடைபெறும் போது இம்மயிலுக்கும் தீபாராதனை நடைபெறுகிறது. கந்த ஷஷ்டி காலம் கந்தக் கடவுளுக்கு உரிய காலம். மயிலை வாகனமாக ஏற்ற காலமும் இதுவே. அன்றைய தினம் கதிர்வேலாயுத சுவாமி வெண்ணீற்றுடன் விபூதி காப்பு சாத்தப் பட்டு வெண்ணிற அலங்காரத்துடன் இருந்தவேளை வெண்மயிலின் வரவு மிகவும் பொருத்தமாகவும் அமைந்தது சென்மார்க்கிறெத்தன் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு புதுப்பொலிவையும் நம்பிக்கையையும் இந்த மயில் வரவு உள்ளாக்கியுள்ளது.

தானாக வந்த பெண் மயிலுடன் மற்றைய ஆண்மயிலும் வாங்கப்பட் டுள்ளது. தற்போது வெள்ளை மயில்கள் இரண்டும் ஆலயத்தில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

## திருப்புகழ்

### திருவாவினன்குடி (பழநி)

| | |
|---|---|
| அபகார நிந்தை பட் | டுழலாதே |
| அறியாத வஞ்சரைக் | குறியாதே |
| உபதேச மந்திரப் | பொருளாலே |
| உனைநான் நினைந்தருள் | பெறுவேனோ |
| இபமாமுகன் தனக்கு | இளையோனே |
| இமவான் மடந்தை உத் | தமி பாலா |
| செபமாலை தந்த சற் | குருநாதா |
| திருவாவி னன்குடிப் | பெருமானே. |








ஆழ்ந்த இறை நம்பிக்கை உடையவர்கள் இவ்விடயத்தை ஆன்மீகத்திற்கு உட்படுத்திப் பார்ப்பார்கள். இந் நிகழ்வு சாதாரணமாக நடப்பதைப் போன்றும் எடுத்துக் கொள்ள முடியாது. சுவிஸ் தமிழர்கள் மத்தியில் பரபரப்பையும் இறையுணர்வையும் ஏற்படுத்திய அந்த நிகழ்வு 07.11.2010 அன்று ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்தது. இறையின் தாளர் தமிழ் இளைஞர்கள் விளையாட்டு மைதானத்தில் மாலைநேரம் கரப்பந்தாட்டம் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது எங்கிருந்தோ வெண்மயில் ஒன்று பாதுகாப்புத் தேடி பறந்து வந்து அவர்களிடம் அடைக்கலமானது. பூனை ஒன்று துரத்தி வந்ததாகக் கூறப்பட்டது.

அதையடுத்து அங்கிருந்தவர்கள் சென்மார்க்கிறெத்தன் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய நிர்வாகத்தினரு க்கு இந்த விடயத்தைத் தெரியப்படுத்தினார் கள். அத்தோடு முறையாக சுவிஸ் செங்காலன் மாநில காவல்துறையினருக்கு தகவல் கூறப் பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த காவல்துறையினர் வெண்மயிலை கையகப் படுத்தி வளர்ப்புப் பிராணிகளுக்கான அடையாளக் குறியீடு கால்களில் பொருத்தப்பட்டுள்ளதா எனச் சோதித்ததில் அவைகள் காணப்படவில்லை. அதையடுத்து ஆலய நிர்வாகத்தினர் தமிழர்களின் அனுஷ்டான




பூர்த்தியாகி 2007ஆம் ஆண்டு குடமுழுக்கு விழா இடம்பெற்றது. நிரந்தரமான ஆலயம் அமைந்த பின்னர் மக்களின் பங்களிப்பும் வருகையும் அதிகரித்தன.

முருகனின் அருட்கடாட்சம் ஓங்க ஓங்க பக்தர்களின் வருகையும் அதிகரிக்க மக்களின் வசதி கருதி பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இப்போது முருகனை நோக்கி வரும் பக்தர்கள் ஆலயத்தை சீராக மேலும் மேம்படுத்த உதவத் தயாராக இருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் விசேட பூஜை நடைபெற்று வந்த ஆலயத்தில் இப்போது வருடாந்த உற்சவம், கந்தஷஷ்டி உற்சவம் என்பன விசேடமாக இடம்பெறுகிறது. அத்துடன் சைவ மக்களின் விரத தினங்களில்கூட விசேட உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மடாலயதிபதிகள், ஆதீனங்கள், ஆன்மீகப் பேச்சாளர்கள், புத்திஜீவிகள் எனப் பெரும் எண்ணிக்கையாளர்கள் ஆலயத்திற்கு வந்து தரிசிக்கின்றனர். அவர்களின் அரிய சிந்தனையை எமது மக்களும் அறிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.



தமிழகத்திலிருந்தும் தாயகத்திலிருந்தும் சிறப்புக் கலைஞர்கள் வருகை தந்து காதுக்கினிய இசை கானங்களை எமது மக்களுக்கு வழங்குகிறார்கள்.

இதற்கு மேலாகப் பல்வேறு அறிஞர்கள் வருகை தந்து நூல் வெளியீடுகளையும் ஆலயத்தில் அரங்கேற்றியுள்ளனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக சுவிஸ் நாட்டவர்கள் எம்மதம் மீது நாட்டம் கொள்ளக்கூடிய சூழல் உருவாகி உள்ளது. எமது சமயத்தின் பெருமைகளை அவர்கள் அறிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.


முருகனின் திருவருளாலும் ஆலய நிர்வாகத்தின் செம்மையான பணியினாலும் ஆலயம் வளர்ச்சி கண்டு வருகிறது.

## எதிர்காலத்திட்டங்கள்

ஆலயத்துக்குத் தனியாக நிலம் வாங்கி ஆலயம் அமையவேண்டும் என்பது நீண்ட காலத் திட்டமாகும். முருகனின் அனுமதி கிடைக்கும்போது அதுவும் மக்களின் பங்களிப்புடன் நிச்சயம் நிறைவேறும் என்று நம்பிக்கை உள்ளது.

ஆலயத்தில் கொடித்தம்பம் அமைத்தல், சித்திரத்தேர் அமைத்தல் போன்ற திருப்பணிகளும் முருகனின் திருவருளுடன் நிறைவேறும் என நம்புகிறோம்.

ஆலய பரிபாலன சபை



# இறையுணர்வை ஏற்படுத்திய வெள்ளை மயில் வருகை





சுவிஸ் நாட்டிலே செங்காலன் மாநிலத்திலே றைன் நதிக்கரையினிலே மலையும் மலை சார்ந்து விளங்கும் அழகிய சென் மார்க்கிறெத்தன் பதியில் கோவில் கொண்டு வேண்டுவோர் வேண்டுவதை வழங்கி அடியார்களுக்குப் பல அற்புதங் களைக் காட்டி அருள் பாலித்துக் கொண்டி ருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கந்த ஷஷ்டித் திருநாளில் காட்டிய அற்புதம் இது.





செங்காலன், சென்மார்க்கிறெத்தன்
சுவிற்சர்லாந்து






















































# முருகனை ஈர்க்கும் மயில்

தமிழ் கடவுளாம் முருகனின் வாகனம் மயில் அந்த மயில் சென்மார்க்கிறெத்தன் பிரதேசத்தில் தொடர்ந்து வந்து சென்ற வண்ணமேயுள்ளது.

21ஆம் ஆண்டு வெள்ளை மயில் ஒன்று ஆலயத்திற்கு வந்து சேர்ந்த அதிசயம் இப்பிரதேச மக்களை புளகாங்கிதம் அடையச் செய்திருந்தது. சுவிஸ் அரசின் அனுமதியுடன் அந்த மயில் ஆலயத்தில் வைத்து பராமரிக்கப் பட்டு வருகின்றது. இந்த மயிலின் வருகையு டன் ஆண் வெள்ளை மயில் ஒன்று ஆலயத்தி ற்கு கிடைத்தது.



இந்த மயில்களின் வருகையின் பின் இரண்டு மாதங்களில் மற்றொரு நீல மயில் சென்மார்க்கிறெத்தன் பகுதிக்கு வந்தது. இந்த மயில் தொடர்பாக பிராந்திய நிர்வாகம் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டது. இந்த மயில் உங்களு டையதா எனக் கேட்டது. அந்த மயில் எங்களுடையதல்ல என ஆலய நிர்வாகம் கூறியதும் அந்த மயில் காட்டில் பறக்க விடப்பட்டது.




அண்மையில் ஒரு மாதத்திற்கு முன்னர் எமது ஆலய செயற்குழு உறுப்பினரான கஜன் என்பவர் .... என்ற இடத்திற்குச் சென்று அங்கு தனது வாகனத்தை நிறுத்தினார். அருகிலுள்ள விடுதி ஒன்றில் அவர் காப்பி அருந்திக்கொண்டிருந்தார். அந்த நேரம் அவரின் வாகனத்தின் மீது ஒரு மயில் வந்திருந்தது. அவர் அதன் அருகே சென்றதும் அந்த மயில் தோகை விரித்து அழகாக ஆடியது. இதைக் கண்டு அவர் பிரமித்துப் போனார். சில நிமிட நேரத்தில் அந்த மயில் பறந்து காட்டுப்பக்கம் சென்றுவிட்டது.

ஆலயத்துடன் தொடர்புடையவர்கள் இந்தப் பகுதியில் மயிலைக் கண்டதாகக் கூறுகின்றனர்.

அருளாட்சி புரியும் கதிர்வேலனை நோக்கி மயிலின் வருகை முருகன் மீதான பற்றுறுதியை மேலும் உயர்த்தியுள்ளது.

இதேவேளை முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் முருகன் ஆலயத்திற்கு எமது சபையின் தலைவர் வே. கணேசகுமார் கடந்த டிசம்பர் மாதம் சென்றார். அனைத்துலக முருகபக்தி மாநாட்டு அழைப்பிதழை முருகனின் தாளில் வைத்து வழிபட்டுத் திரும்பினார். அப்போது ஆலய கோபுர வாசலில் இருந்த மயில்கள் கூட்டம் கிட்ட வந்து தோகை விரித்து ஆடி ஆசீர்வதித்தன.



STAG, 11. NOVEMBER 2010

# Der Rheintaler

## Wer vermisst einen Pfau?

பிந்திய செய்தி கடந்த செவ்வாய்க்கிழமை இது போன்ற ஒரு மயில் அதே இடத்தில் வந்து இறங்கியதாகவும், அதனை சுவிஸ் மக்கள் கண்டு காவல்துறையினருக்குத் தகவல் கொடுத்து, தாங்கள் கையகப்படுத்தி Eichberg என்னும் கிராமத்தில் உள்ள சிறுவர் மிருகக்காட்சிச்சாலைக்கு கொடுத்ததாகவும் மயில் எங்கிருந்து வந்தது யாருடையது என்பதைக் காவல்துறையினர் விசாரித்து வருவதாக இன்றைய Rheintaler எனும் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தி தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சுவிஸ் மக்களிடையேயும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



### வேலும் மயிலும் துணை

# மயில் விருத்தம்



**காப்பு**

சந்தன பாலித குங்கும புளகித சண்பக கடகபுயச்
சமர சிகாவல குமர ஸடாநந சரவண குரவணியுங்
கொந்தள பாரகி ராத புராதனி கொண்க எனப்பரவுங்
கூதள சீதள பாதமெ னக்கருள் குஞ்சரி மஞ்சரிதோய்
கந்தக்ரு பாகர கோமள கும்ப கராதிப மோகரத
கரமுக சாமர கர்ணவி சால கபோல விதானமதத்
தெந்தம கோதர மூஸிக வாகன சிந்துர பத்மமுகச்
சிவசுத கணபதி விக்னவி நாயக தெய்வ சகோதரனே

## நூல்


சந்தான புஷ்பபரி மளகிண் கிணீமுகச்
சரணயுக ளமிர் தப்ரபா
சந்த்ரசே கருமூஸி காரூட வெகுமோக
சத்யப்ரி யாலிங்கனச்
சிந்தா மணிக்கலச கரகட கபோலத்ரி
யம்பக விநாயகன் முதற்
சிவனைவலம் வருமளவில் உலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாபமயிலாம்
மந்தா கினிப்பிரப வதரங்க விதரங்க
வனசரோ தயகிர்த்திகா
வரபுத்ர ராஜீவ பரியங்க தந்திய
வராசலன் குலிசாயுதத்
திந்த்ராணி மங்கில்ய தந்துர சாபரண
இகல்வேல் விநோதன் அருள்கூர்
இமையகிரி குமரிமகன் ஏறுநீ லக்ரீப
ரத்னக் கலாபமயிலே
சக்ரப்ர சண்டகிரி முட்டக் கிழிந்துவெளி
பட்டுக்ர வுஞ்சசயிலந்
தகரப் பெருங்கனக சிகரச்சிலம்புமெழு
தனிவெற்பும் அம்புவியுமெண்
திக்குத் தடங்குவடும் ஒக்கக் குலுங்கவரு
சித்ரப் பதம்பெயரவே
சேடன்முடி திண்டாட ஆடல்புரி வெஞ்சகூ
திடுக்கிட நடிக்குமயிலாம்



பக்கத்தி லொன்றுபடு பச்சைப் பசுங்கவுரி
பத்மப் பதங்கமழ் தரும்
பாகீ ரதிச்சடில யோகீ சுரர்க்குரிய
பரமவுப தேசமறிவிக்கைக்குச் செழுஞ்சரவ ணத்திற்
பிறந்தவொரு
கந்தச் சுவாமிதணிகைக்
கல்லார கிரியுருக வருகிரண மரகத
கலாபத்தில் இலகுமயிலே

ஆதார பாதலம் பெயர அடி பெயரமூ
தண்டமுக டதுபெயரவே
ஆடரவ முடிபெயர எண்திசைகள் பெயரவெறி
கவுட்கிரி சரம்பெயரவே
வேதாள தாளங்க ளுக்கிசைய ஆடுவார்
மிக்கப்ரி யப்படவிடா
விழிபவுரி கௌரிகண் டுளமகிழ விளையாடும்
விஸ்தார நிர்த்தமயிலாம்
மாதாநு பங்கியேனும் மாலது சகோதரி
மகீதரி கிராதகுலிமா
மறைமுனி குமாரிசா ரங்கனந் தனிவந்த
வள்ளிமணி நூபுரமலர்ப்
பாதார விந்தசே கரனேய மலருமுற்
பலகிரி யமர்ந்தபெருமாள்
படைநிருதர் கடகமுடை படநடவு பச்சைப்
பசுந்தோகை வாகைமயிலே.







யுககோடி முடிவின்மண் டியசண்ட மாருதம்
உதித்ததென் றயன் அஞ்சவே
ஒருகோடி அண்டர் அண்டங்களும் பாதாள
லோகமும் பொற்குவடுறும்
வெகுகோடி மலைகளும் அடியினில் தகர்ந்திரு
விசும்பிற் பறக்க விரி நீர்
வேலைசுவ றச்சுரர் நடுக்கங் கொளச்சிறகை
வீசிப் பறக்கு மயிலாம்
நககோடி கொண்டவுணர் நெஞ்சம் பிளந்துநர
கேசரி முராரி திருமால்
நாரணன் கேசவன் சீதரன் தேவகீ
நந்தனன் முகுந்தன் மருகன்
முககோடி நதிதரன் குருகோடி யனவரத
முகில்உலவு நீலகிரிவாள்
முருகன் உமை குமரன் அறு முகன்நடவு விகடதட
மூரிக் கலாபமயிலே

சோதியிம வேதண்ட கன்னிகையர் தந்தஅபி
நயதுல்ய சோமவதன
துங்கத்ரி சூலதரி கங்காளி சிவகாம
சுந்தரி பயந்தநிரைசேர்
ஆதிநெடு மூதண்ட அண்டபகி ரண்டங்கள்
யாவுங் கொடுஞ்சிறகினால்
அணையுந்த னதுபேடை அண்டங்க ளென்னவே
அணைக்குங் கலாபமயிலாம்




நீதிமறை யோதண்ட முப்பத்து முக்கோடி
நித்தரும் பரவுகிரியாம்
நீலகிரி வேலவன் நிராலம்ப நிர்ப்பயன்
நிர்வியா குலன்சங்குவாள்மாதிகிரி கோதண்ட
தண்டந் தரித்தபுயன்
மாதவன் முராரி திருமால்
மதுகைட வாரிதிரு மருகன்முரு குமரன்
வரமுதவு வாகைமையிலே

சங்கார காலமென அரிபிரமர் வெருவுறச்
சகலலோ கமும்நடுங்கச்
சந்த்ரசூ ரியர்ஒளித் திந்த்ராதி அமரருஞ்
சஞ்சலப் படவுமையுடன்
கங்காளர் தனிநாட கஞ்செய்த போதந்த
காரம் பிறந்திடநெடுங்
ககனகூ டமுமேலை முகடுமூ டியபசுங்
கற்றைக் கலாபமயிலாம்
சிங்கார குங்கும படீரம்ருக மதயுகள
சித்ரப்ப யோதரகிரித்
தெய்வவா ரணவனிதை புனிதன் குமாரன்
திருத்தணி மகீ தரன் இருங்
கெங்கா தரன்கீத மாகிய சுராலய
க்ருபாகரன் கார்த்திகேயன்
கீர்த்திமா அசுரர்கள் மடியக்ர வுஞ்சகிரி
கிழிபட நடாவுமயிலே
தீரப் பயோததி திக்குமா காயமும்

செகதலமும் நின் றுசுழலத்
திகழ்கின்ற முடிமவுலி சிதறிவிழ வெஞ்சிகைத்
தீக்கொப் புளிக்கவெருளும்
பாரப் பணாமுடி அனந்தன்முதல் அரவெலாம்
பதைபதைத் தேநடுங்கப்
படர்சக்ர வாளகிரி துகள்படவை யாளிவரு
பச்சைப்ர வாளமயிலாம்
ஆரப்ர தாபபுள கிதமதன பாடீர
அமிர்தகல சக்கொங்கையாள்
ஆடுமயில் நிகர்வல்லி அபிராம வல்லிபுர
மானந்த வல்லிசிறுவன்
கோரத்ரி சூலத்ரி யம்பக ஜடாதர
குருதரு திருத்தநிகைவேள்
கொடியநிசி சரருதர மெரிபுகுத விபுதர்பதி
குடிபுகுத நடவுமயிலே

செக்கரள கேசசிக ரத்னபுரி ராசிநிரை
சிந்தப்பு ராரிஅமிர்தந்
திரும்பப் பிறந்ததென ஆயிரம் பகுவாய்கள்
தீவிசங் கொப்புளிப்பச்
சக்ரகிரி சூழவரு மண்டலங் கள்சகல
சங்கார கோரநயனத்
தறுகண்வா சுகிபணா முடியெடுத் துதறுமொரு
சண்டப்ர சண்டமயிலாம்
விக்ரம கிராதகுலி புனமீ துலாவிய
விருத்தன் திருத்தணிகை வாழ்





வேலாயுத தன்பழ வினைத்துடர் அறுத்தெனை
வெளிப்பட வுணர்த்தியருளித்
துக்கசுக பேதமற வாழ்வித்த கந்தச்
சுவாமிவா கனமானதோர்
துரககஜ ரதகடக விகடதட நிருதர்கல
துஷ்டர்நிஷ் டுரமையிலே

சிகரதம னியமேர கிரிரசத கிரிநீல
கிரியெனவும் ஆயிரமுகத்
தெய்வநிதி காளிந்தி எனநீழல் இட்டுவெண்
திங்கள்சங் க்கெனவும்ப்ரபா
நிகரெனவும் எழுதரிய நேமியென வுலகடைய
நின்றமா முகிலென்னவே
நெடியமுது ககனமுக டுறவீசி நிமிருமொரு
 நீலக்க கலாபமயிலாம்
அகருமரு மணம்வீசு தணிகையபி ராமவேள்
அடியவர்கள் மிடியகலவே
அடல்வேல் கரத்தசைய ஆறிரு புயங்களில்
அலங்கற் குழாமசையவே
மகரகன கோமளக் குண்டலம் பலவசைய
வல்லவுணர் மனமசையமால்
வரை அசைய உரகபிலம் அசையஎண்திசை அசைய
வையாளி ஏறுமயிலே

நிராசுத விராசத வரோதய பராபரன்
நிராகுலன் நிராமயபிரான்
நிலாதெழு தலாலற மிலான்நெறி
நிலாவிய வுலாச இதயன்

குராமலி விராவுமிழ் பராரைய மராநிழல்
குராநிழல் பராவுதணிகைக்
குலாசல சராசலம் எலாம்இனி துலாவிய
குலாவிய கலாபமயிலாம்
புராரிகு மராகுரு பராஎனும் வரோதய
புராதன முராரிமருகன்
புலோமசை சலாமிடு பலாசன வலாரிபுக
லாகுமயி லாயுதன்நெடுங்
தராதல கிராதர்கள் குலாதஅபி ராமவல
சதானன விநோதசமரன்
தடாரிவிசு டாசுரன் குடாரித படாதிகழ்
சடானனன் நடாவுமயிலே

எந்நாளும் ஒருசுனையில் இந்த்ரநீ லப்போ
திலங்கிய திருத்தணிகைவாழ்
எம்பிரான் இமையவர்கள் தம்பிரான் ஏறும்ஒரு
நம்பிரா னானமயிலைப்
பன்னாளும் அடிபரவம் அருணகிரி நாதன்
பகர்ந்தஅதி மருசித்ரப்
பாடல்தரும் ளாதிமறைநூல்
மன்னான் முகம்பெறுவர் அன்னம்ஏ றப்பெறுவர்
வாணிதழு வப்பெறுவரால்
மகரால யம்பெறுவர் றப்பெறுவர்
வாரிச மடந்தையுடன்வாழ்
அந்நாய கம்பெறுவர் அயிராவ தம்பெறுவர்
அமுதா சனம்பெறுவர்மேல்
ஆயிரம் பிறைதொழுவர் சீர்பெறுவர் பேர்பெறுவர்
அழியா வரம்பெறுவரே





# மருதமலை மாமணியே

மருதமலை மாமணியே முருகையா
தேவரின் குலம் காக்கும் வேலய்யா - ஐயா (மருதமலை)

மணமிகு சந்தனம் அழகிய குங்குமம்
ஐயா - உனது மங்கள மந்திரமே (மருதமலை)

தைப்பூச நன் நாளில் தேருடன் திருநாளும்
பக்தர்கள் கொண்டாடும் கந்தையா ஆ........... (மருதமலை)

கோடிகள் குவிந்தாலும் கோமகனை மறவேன் ஆ.....
கோடிகள் குவிந்தாலும் கோமகனை மறவேன்
நாடிய வினைதீர நான் வருவேன்
அஞ்சுதல் நிலைமாறி ஆறுதல் உருவாக
எழுந்திட திருவன்னை மெச்சிடுவேன் (மருதமலை)





சக்தித் திருமகன் முத்துக்குமரை மறவேன்
நான் மறவேன்
பத்திக் கடலென் பக்திப் பெருகிட வருவேன்
நான் வருவேன்
பரமனின் திருமகனே அழகிய திரு மகனே
காண்பதெல்லாம் உனது முகம் பதினாறு மகம்
காலமெல்லாம் எனது பலம் உரு திரு முருகா
அதிபதியே குருபரனே அருள்நிதியே சரவணனே
பனி அதில் மலை அதில் நதி அதில் கடல்
அதில் சகலதும் உனதருள் கருணையே
எழிவது வருவாய் குகனே வேலய்யா ஆ....... (மருதமலை)


வாழ்வாதாரத் திட்டம்
அனுசரணை:-
அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்
சுவிஸ்லாந்.
பயனாளிகள்:
கி.பிரதீபா வி.சந்குணவதி சி.மணிமேகலை
யோ. அருள்ஞானம். அ.பத்மராணி செ.நாகேஸ்வரி


வாழ்வாதாரத் திட்டம்
அனுசரணை


அனுசரணை
சுவிஸ்லாந்.
கடை
08.05.2011 11:40


பயனாளிகள்:
கி.பிரதீபா






அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி
பயனாளிகள்:
கி.பிரதீபா
யோ. அருள்ஞானம்.




கதிர் வேலாயுத சுவாமி கோயில்
சுவிஸ்




அருள்மிகு ஸ்ரீ






அருள்மிகு ஸ்ரீ


அருள்மிகு ஸ்ரீ
வேலாயுத சுவாமி கோயில்
சுவிஸ்





## வியாபாரம்





















அருள்மிகு ஸ்ரீ
கதிர் வேலாயுத சுவாமி கோயில்
சுவிஸ்


அருள்மிகு ஸ்ரீ
சுவிஸ்


அருள்மிகு ஸ்ரீ
சுவிஸ்












சுவிஸ்








# கோழி வளர்ப்பு
































# கோ தானம்



















# இன்னல்படும் தாயக உறவுகளுக்கு கை கொடுக்கும் புலம்பெயர் உறவுகள்

தாயகத்தில் இன்னல்படும் எமது உறவுகளின் வாழ்வை சீராக்க பல்வேறு நலத்திட்டங்களை சென்மார்க்கிறெத்தன் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் முன்னெடுத்து வருகின்றது.

ஒவ்வொரு குடும்பங்களின் பாதிப்பு நிலையை கிராமசேவையாளரின் சிபார்சுடன் பெற்று அவர்களுக்குரிய வகையில் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆலயம் ஊடாகவும் ஆலய பக்தர்களின் ஊடாகவும் கிடைக்கும் நிதியில் இருந்து இந்த நலத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்கான சுயதொழில் வாய்ப்புத்திட்டம், கோதானம், செயற்கை அவயவங்கள் பொருத்தல் போன்ற திட்டங்கள் தனித்தனி குடும்பங் களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் பாடசாலை மாணவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் எனக் கூட்டாகவும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆலயம் மற்றும் பக்தர்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களின் விவரமும் பயனாளிகளின் விவரமும் பட்டியலாகக் கீழே தரப்படுகின்றது.

**சிறுவர் கல்வி அபிவிருத்தித் திட்டம்**

1. முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 170 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.



2. திருகோணமலையில் 18 பிள்ளைகளும் அம்பாறை மாவட்டத்தில் ஆறு பிள்ளைகளும் கல்வி ஊக்குவிப்பிற்காக மாதாந்தம் நிதி உதவி பெறுகிறார்கள். இந்த ஊக்குவிப்பு 2012ஆம் ஆண்டில் இருந்து வழங்கப்படுகிறது.

3. கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தில் தங்கியுள்ள தாய் தந்தையரை இழந்த பிள்ளைகளில் 50 பிள்ளைகளை ஆலயம் பொறுப்பெடுத்துள்ளது. அவர்களுக்கான உணவு உடை வழங்கப் படுகிறது. அத்துடன் அவர்களுக்கு கல்வி மருத்துவ உதவி களும் மாதாந்தம் வழங்கப்படுகிறது.

4. கடந்த காலங்களில் கிளிநொச்சி மகா தேவா ஆச்சிரமத்துக்கு பல்வேறு உதவி கள் வழங்கப்பட்டன. 05.12.2012 அன்று 5 கணினிகளும் அதற்குரிய உபகரணங் களும், 28.10.2012 அன்று வீடியோ கமெரா, 07.04.2013 அன்று 5 கணினி களும் அதற்குரிய உபகரணங்களும், 04.09.2013 அன்று 12 கணினிகளும் அதற்குரிய உபகரணங்களும் அத்துடன் உடுப்புகளும் வழங்கப்பட்டன.

**கோதானம்**

| | |
|---|---|
| ச. சகாயவதனி | வட்டக்கண்டல் |
| ஞா. தெய்வநாயகி | உருத்திரபுரம் |
| ஆர். பரமேஸ்வரி | புளியங்குளம், அடம்பன் |
| அ. சுபாஜினி | பளை |
| பொ. தயாவதி | ஆரையம்பதி |



**பொது வேலைத்திட்டங்கள்**

1. கிளிநொச்சி செல்வாநகரில் பொதுவான குழாய்க்கிணறு அமைக்கப்பட்டது. சக்தி வேல் பிரகாஸ் என்பவரின் பொறுப்பில் இக்கிணறு அமைக்கப்பட்டது.
2. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி
3. கிளிநொச்சி பரந்தன் பகுதிகளில் மேற் கொள்ளப்பட்ட சமூக பொருளா தார அபிவிருத்தித் திட்டத்திற்கு உதவி
4. மட்டக்களப்பு திலகவதி மகளிர் இல் லத்திற்கு உதவி
5. தெல்லிப்பளை துர்க்கையம்மன் மகளிர் இல்லத்திற்கு உதவி
6. மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவை ஊடாக ஆறு மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

**சுய தொழில் வாய்ப்புத்திட்டம்**

1. வி. ஜெகநாதன், உக்கிளாங்குளம், வவுனியா (ஓட்டோ)
2. ந. அருள்மொழி, கோணாவில் கிளிநொச்சி (மேசை, கதிரை, மின்சார இயந்திரம், பாத்திரங்கள்)
3. கு. தனலட்சுமி, விசுவமடு (நீர் இறைக்கும் இயந்திரம்)
4. ஆ. விஜயநிர்மலா, மாமூலை, முள்ளியவளை (கோழி வளர்ப்பு)
5. நாகராசா ஜெயசீலி, மாமூலை, முள்ளியவளை (கோழி வளர்ப்பு)
6. சுதாகர் நாகேஸ்வரி , மலையாளபுரம் கிளிநொச்சி (நீர் இறைக்கும் இயந்திரம்)
7. ந. பிரபாகரன், கிளிநொச்சி (வெல்டிங் இயந்திரம்)
8. இராசலிங்கம் ஸ்ரீ வாகினி, முள்ளியவளை (சிறு வியாபாரம்)
9. சி. பிரதீபா, முல்லைத்தீவு (கோழி வளர்ப்பு)
10. யோ. அருள்ஞானம், முல்லைத்தீவு (கோழி வளர்ப்பு)
11. வி. சற்குணவதி, முல்லைத்தீவு (சிறு வியாபாரம்)
12. அ. பத்மராணி, முல்லைத்தீவு (சிறு வியாபாரம்)
13. சி. மணிமேகலை, (முல்லைத்தீவு (கோழி வளர்ப்பு)
14. செ. நாகேஸ்வரி, கிளிநொச்சி (தையல் இயந்திரம், உப கரணங்கள்)
15. பா. வசந்தகுமாரி, கிளிநொச்சி (கோழி வளர்ப்பு)
16. மா. செல்வகுமாரி, பரந்தன் (நீர் இறைக்கும் இயந்திரம், உபகரணங்கள்)
17. வா. சுபாசினி, கிளிநொச்சி (கோழி வளர்ப்பு)
18. க.றஞ்சனாதேவி, கிளிநொச்சி (மலசலகூடம் அமைத்தல்)
19. அ. சுபாசினி - பளை
20. செ. துரைசிங்கம் - கிளிநொச்சி
21. சி. ஜமிலா - அளம்பில்
22. தங்கவேல் - முல்லைத்தீவு (கோழி வளர்ப்பு)
23. சு. தனேஸ்வரி - கிளிநொச்சி
24. செ. நளாயினி - கண்டாவளை (கோழி வளர்ப்பு)
25. மகேஸ்வரன் - விசுவமடு
26. விமராஜ் - மாங்குளம் (நீர் இறைக்கும் இயந்திரம், பைப்)
27. நா. நவநீதன் - முள்ளிவாய்க்கால்
28. சிவபாக்கியவதி - எழுதுமட்டுவாழ்
29. ந. அருள்மொழி, கோணாவில், கிளிநொச்சி (சிறு தொழில்)
30. ரவிச்சந்திரன், முள்ளியவளை (சிறு தொழில்)
31. அபயரூபன் சறோஜினி, வவுனியா (தையல் இயந்திரம்)
32. குமாரதாசன் மரகதம், கிளிநொச்சி (கதிரை, மேசை, தையல் இயந்திரம்)
33. தவசி தவராஜா, முல்லைத்தீவு (நீர் இறைக்கும் இயந்திரம், உபகரணங்கள்





Sivamayam

மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்

**MAHADEVA ACHCHIRAMA CHILDREN HOME**

Reg No NEP/PCC/CH/132 Department of Social Service

Bank A/c No 9991351 Bank of Ceylon Kilinochchi

Sivamayam

மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்

**MAHADEVA ACHCHIRAMA CHILDREN HOME**

Reg No NEP/PCC/CH/132 Department of Social Service

Bank A/c No 9991351 Bank of Ceylon Kilinochchi

05.12.2012



**FEDERATION OF YOUNG MEN'S HINDU ASSOCIATION**

BATTICALOA DISTRICT – SRI LANKA

BT/D.Y.M.H.A

Date: 08/02/2014

MUNAIPPU – BATTICALOA

MUNAIPPU

24.03.2011

St. Margreethen Stgalen

Swiss.

72600/=

செங்காலன், சென்மார்க்கிறெத்தன்
சுவிற்சர்லாந்து

மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்

**MAHADEVA ACHCHIRAMA CHILDREN HOME**

Reg. No: NEP/PCC/CH/132 Department of Social Service

Bank A/C No: 9991351 Bank of Ceylon, Kilinochchi

Web: www.mahadevahome.org

FACEBOOK ID: MAHADEVA ACHCHIRAMA CHILDREN HOME

[illegible]

மகாதேவ ஆச்சிரம சைவ சிறுவர் இல்லம்

புதுமுறிப்பு, கிளிநொச்சி.

**பொருள் பெறுகைச் சான்று**

பெயர்: கதிர்வேலாயுத சுவாமிகோ ஆலயம்  பதிவு எண்:

முகவரி: சுழிபுரம்  திகதி: 05/12/2012

| இல | விபரம் | தொகை | குறிப்பு |
|---|---|---|---|
| 01 | C.U.P | 05 | |
| 02 | [illegible] | 04 | |
| 03 | [illegible] | 05 | |
| 04 | [illegible] | 03 | |

பெறுநர்  சரிபார்த்தவர்  வழங்கியவர்

அறுதிசெய்தவர்

மகாதேவ ஆச்சிரம சைவ சிறுவர் இல்லம்

புதுமுறிப்பு, கிளிநொச்சி.

**பொருள் வழங்கல் சான்று**

பெயர்: ARULMIGU SRI KATHIR VELAUTHA SWAMY ALAYAM, INDUSTRIE STRASSE 37 ST. MARGRETHEN (SWISS)  பதிவு எண்:

முகவரி:  திகதி: 16/03/2013

| இல | விபரம் | தொகை | குறிப்பு |
|---|---|---|---|
| | COMPUTER SYSTEM | 05 | |
| | MONITOR | 06 | |
| | KEYBOARD | 06 | |
| | M CDROM | 05 | |

267

பெறுநர்  வழங்கியவர்

அறுதிசெய்தவர்

மகாதேவா ஆச்சிரமச் சைவச் சிறுவர் இல்லம்

**MAHADEVA ACHCHIRAMA SAIVACH CHIRUVAR ILLAM**

*Approved Charity - vide-Department of Probation and Child Care Services No-NP/24/2/1/CH/13 of 01.09.2009*

ஜெயந்திநகர், கிளிநொச்சி, இலங்கை.  Jeyanthinagar, Kilinochchi, Sri Lanka.

நன்கொடை பொருள் வழங்கல் பற்றுச் சீட்டு (Good Donation Receipt)

பெயர் (Name): ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகோ ஆலயம்

முகவரி (Address): சுவிஸ்

திகதி (Date): 21/02/014

| இல (No) | விபரம் (Description) | தொகை (Amount) | குறிப்பு (Remark) |
|---|---|---|---|
| 01 | [illegible] | 26 [illegible] | |

G. Gomilan

பெறுநர் Receiving Officer  சரிபார்த்தவர் Certifying Officer  வழங்குபவர் Donor

Sivamayam

மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்

**MAHADEVA ACHCHIRAMA CHILDREN HOME**

Reg. No: NP/24/2/1/CH/13- Department of Social Service

[illegible] 9991351 · [illegible]

Bank A/C No: 9991351 Bank of Ceylon, Kilinochchi

[illegible]

[illegible]

Sivamayam

மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்

**MAHADEVA ACHCHIRAMA CHILDREN HOME**

Reg No NEP/PCC/CH/132 Department of Social Service

[illegible]

Bank A/c No 9991351 Bank of Ceylon Kilinochchi

10.12.2012

[illegible]

Sivamayam

# மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்

# MAHADEVA ACHCHIRAMA CHILDREN HOME

**Reg No NEP/PCC/CH/132 Department of Social Service**

**[illegible] 9991351 · [illegible]**

**Bank A/c No 9991351 Bank of Ceylon Kilinochchi**

Puthumurippu
Oruthirapuram
Kilinochchi
Srilanka

01.07.2013

[illegible]















# தந்தையை இழந்த மற்றும் வறிய மாணவர்களுக்கு உதவி




















## ஆலயத்தின் ஊடாக கிழக்கு மாகாணத்தில் கல்விகற்கும் மாணவர்கள்



சுவிற்சர்லாந்தின் அல்ப்ஸ் மலைத்தொடரில் தமிழர்களின் தேர்த்திருவிழா





# சுவிற்சர்லாந்தின் செங்காளன், சென்மார்க்.கிறேத்தன் அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் அரும்பணிகள்



## அனைத்துலக முருக பக்தி மாநாடு அடுத்தவருடம் சுவிஸ் நாட்டில்

## இந்துமத நம்பிக்கையை வளர்க்க மலேசிய முருக உபாசகர்-



## 2014 இல் சுவிற்சலாந்தில்

புலம்பெயர் தமிழர்களின் துயர் துடைக்கும் சுவிட்சர்லாந்து

# அருள்மிகு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி



சுவிட்சர்லாந்தில் அற்புதங்கள் பல புரிந்து, பக்தர்களுக்கு அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் சென்காலன் சென்மார்க்கிறேத்தன் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தின் பெருந்திருவிழா பக்திமயமான எழுச்சியுடன் முடிவடைந்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் 26 மாநிலங்களில் வாழும் புலம்பெயர்ந்த மக்கள் தமது சமய பக்தியை வெளிபடுத்த ஆலயங்களை அமைத்து அவற்றைச் சிறப்புற நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சில மாநிலங்களில் இரண்டுக்கு மேற்பட்ட ஆலயம் என்றும் 24 ஆலயங்களை புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் அமைத்து தமது இன்னல்களுக்கு முடிவு காணப் பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றனர். பூசைகள், விசேட உற்சவங்கள் என பல நிகழ்வுகளை நடத்தி இறைபக்தி மீதான தமது செயற்பாட்டை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையில் செங்காலன் மாநிலத்தில் சென்மார்க்கிறேத்தன் பிரதேசத்தில் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தை அமைத்து சிறப்பாக நடத்தி வருகின்றனர். ஆன்மிகப் பணியுடன் தாயகத்தில் இன்னல்படும் உறவுகளின் மறுவாழ்வுக்காக வாழ்வாதார உதவிகளையும் ஆலய நிர்வாகம் செய்து வருகின்றது. வே.கணேசகுமார் தலைமையின் கீழ் ஆலய நிர்வாகம் செய்து வரும் பணிகள், புலம் பெயர்ந்த மக்களின் தெய்வீக சிந்தனையை தூண்டுவதுடன், தாயகத்தில் இன்னல்படும் மக்களின் மறுவாழ்வுக்கும் உதவுகின்றன.

இந்த ஆலயத்தின் வருடாந்த பெருவிழா மேமாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகி 28 ஆம் திகதி வரை சிறப்பாக நடைபெற்றுள்ளது. ஜோதிரூபக காட்சியுடன் ஆரம்பமான உற்சவத்தில் 2 ஆம் நாள் சற்கோணகாட்சி, வேதபாராயணமும், 3 ஆம் நாள் சக்திரூபக் காட்சி, திருமுறைப்பாராயணமும், 4ஆம் நாள் குருந்தமரத்திருவிழாவும், 5ஆம் நாள் கப்பல் திருவிழாவும், 6ஆம் நாள் மாம்பழத் திருவிழாவும் 7ஆம் நாள் வேட்டைத் திருவிழாவும், 8ஆம் நாள் சப்பரத்திருவிழாவும், 9ஆம் நாள் தேர்த்திருவிழாவும் 10ஆம் நாள் தீர்த்தத்திருவிழாவும், 11ஆம் நாள் பூத்தண்டிகை, திருக்கல்யாணத்திருவிழாவும் பக்திமயமாக இடம்பெற்றுள்ளன.

**தேர்த்திருவிழா**

தேவர்களின் துயர் துடைக்கப் புறப் பட்ட ஆறுமுகனை ஈசன் வாழ்த்தி தன் பதினொரு வடிவங்களையும் படைக்கலங்க ளாக்கி புத்திரனிடம் தந்தார் ருத்திரன். அப்பாவின் ஆசிபெற்ற ஆறுமுகன் அம்மா விடம் சென்றார்.



வேலனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சிவகாமசுந்தரி மகனைக் கண் டதும் பாசத்தோடு அணைத்துக் கொண்டாள். தன் சக்தி முழுவதும் பொருந்தியதாக வேல் ஒன்றினை வேலனிடம் தந்தாள். மகாசக்தி தன்னுள் புகுந்ததும் உடல் முழுவதும் அது பரவி சிலிர்ப்பை ஏற்படுத்த சில் என்று வியர்ந் தான். வேலை வாங்கிய வேலன் சூரசம்ஹாரம் செய் வதற்கு அன்னையின் ஆசீர்வாதம் பெற்றுப் புறப்பட்டான்.

அமரர்களுக்காக அசுரர்களோடு போரிட்டு பல அரக்கர்களை அழித்தான் வேலன். பத்தாம் நாள் சூரபத்மன் சண்முக னோடு சமருக்கு வந்தான். சுப்பிரமணியனை எதிர்த்து ஆவேசமாகப் போரிட்டான் சூரபத் மன். எதிர்க்க முடி யாத சூரபத் மன் ஒளிவதற்கு இடம் இல்லாமல் தன்னுள் மறைந்து கொள்ள முடிவு செய்து மாபெரும் மரமாக மாறி நின்றான்.

சூரனின் சூழ்ச்சி ஆறுமுகனுக்குத் தெரிய வில்லை. சக்தி ஆயுதமான வேலை எடுத்து வீசவே சர் என்று பாய்ந்தது. மாமரமாக நின்ற சூரனை இரு கூறாக்கியது. இருகூறாகிய சூரன் முருகனைப் பணிந்தான். அவனை சேவலும் மயிலுமாக ஆக்கித் தன் சேவடியில் சேர்த்துக் கொண்டான். இச் சம்பவம் நிகழ்ந்த தினம் ஐப்பசி மாத வளர்பிறை ஷஷ்டி தினத்தில் தான்.

தமிழ்க் கடவுளாகிய கந்தக் கடவுளாம் சுப்பிரமணிய சுவாமிக்குரிய விரதங்களில் மிகச் சிறந்த விரதம் கந்த ஷஷ்டி விரதமாகும். ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையையடுத்து வளர்பிறை பிரதமை முதல் ஷஷ்டி வரையுள்ள ஆறு நாட்கள் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படும். செல்வங்களையும் சுக போகங்களையும் தரவல்ல இவ்விரதம் புத்திர லாபத்திற்குரிய சிறப்பான விரதமாகும். முருகபக்தர்கள் ஒரு கடும் தவமாகக் கருதி ஆறு நாட்களாக உபவாசமிருந்து அனுஷ்டிப்பது வழக்கம். மேலும் இவ்விரதமானது தொடர்ந்து ஆறு நாட்கள் உபவாசமிருந்து பிரதமை யன்று அதிகாலை நீராடி முருகன் ஆலயம் சென்று இறைவழிபாடு செய்து, முருகன் பஜனை பாடி, தண்ணீர் கூட அருந்தாமல் இறுதியில் ஆறாவது நாள் சூரசம்ஹாரம்


வெளியீட்டு விழா
அஷ்டாங்கயோகி












கதா வேலாயுத சுவாமி
திருக்கோயில்













கதிர் வேலாயுத சுவாமி
திருக்கோயில்


திருக்கோயில்




திருக்கோயில்


திருக்கோயில்







## பிரமுகர்களின் வருகை



















# கந்தபுராணம் காட்டும் வேல் வடிவம்





முருகனின் திருக் கோலங்களுள் வேல் வடிவமே மிகவும் தொன்மையானதாகும். வேல் தான் முருகனின் உண்மையான உருவமாகும். முருகனின் அருவுருவத் திருக் கோலமே வேல் எனலாம். வேல் இலை வடிவம் போன்றதென் பதை இலைகுலாம் அயில் எனக் கந்தபுராணம் கூறும். முருகனா கிய கந்தனும் வேலனும் ஒன்றே என்பதை விளக்கிக் கூறும் முதல் தமிழ் ஹறஇல் கந்த புராணமாகும். இதனைக் கச்சியப்ப சிவச்சாரியார்

**அந்தமில் ஒளியின் (ரால்) ஆறுமுகம் படைத்த பண்பால்**
**எந்தை கண்றின்றும் வந்த இயற்கை யாற்சக்தி யாம்பேர்**
**தந்தீடு பணுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்**
**கந்தனே என நின்னைக் கண்டுளக் கவலை நீத்தோம்.**

என மொழிதலாலறியாம்.

வேலினை இறைவனாகவும் கடவுளாகவும் காட்டும் தனிச் சிறப்பு தமிழ் கந்த புராணத்திற்கே உண்டு. இதனையே எண்ணரும் படைகட்கெல்லாம் இடமறவ வேற்கடவுள் கடவுட்செவ்வேல் தெய்வச் செவ்வேல் உடம்பீடித் தெய்வம் என்ற கந்தபுராணக் குறிப்புகள் உணர்த்தி நிற்கின்றது.



முருகனைத் திருவுருவத்தில் அமைத்து வழிபடும் மரபிற்கு முன்னர் ஆலயத்துள் வேல் வைத்து வழிபட்டனர். இப்பண்டைய வழக் கத்தை வேற்கோட்டம் என்று சிலப்பதிகாரச் செய்தி உறுதிப்படுத்துகின்றது. ஈழத்திலுள்ள யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தன் ஆலயம் உலகிலுள்ள வேற்கோட்டங்களுள் மிகப் பெரியதும் புராதன வரலாற்றுச் சிறப்புடைய வேற் கோயிலாகவும் விளங்குகின்றது.

## பிள்ளையார் - ஆரம்ப வழிபாடு

யானைத்தத்துவம் - புத்தியை நிதானப்படுத்தல் ஞாபகசக்தி சிறிய வேலையோ பெரிய வேலையோ சுலபமாகச் செய்து முடித்தல். நீளமானமூக்கு துதிக்கை - நீண்ட ஆயுள்,

## பிரணாயாமம் யோகாசனப்பயிற்சி.

முருகன் - என்றும் இளமை

வள்ளி - இச்சாசக்தி - விருப்பம்

தெய்வயானை - கிரியாசக்தி - செயல்

வேல் - ஞானசக்தி - அறிவு

மயில் - அழகு மழை வருவதை அறிந்து ஆடும் மேகம் இருளும் போது மயில் உணர்ந்து மகிழ் ச்சியாக இருக்கும். அதேபோல் அன்பர்களுக்கு துன்பமான இருள் சூழும்போது இறை வன் மகிச்சியோடு அருள்புரிவான்.



சேவற்கொடி - இருள் அகன்று ஒளி வரும் போது சேவல் கூவும். ஞானஒளி வர எமக்குத் தரும் அடையாளம்.

துர்க்கை - ஆற்றல் தரும் சக்தி - வரம்.

சூலம் - தீய சக்திகளை அழிக்கும் ஆயுதம்.

சிம்மவாகனம் - வரத்தைக் குறிக்கும்.

குங்குமம் - இரத்தநிறம் உடலில் சக்தியை அதிகரிப்பது.

நவக்கிரகம் - ஒன்பது கோள்கள் இயற்கையின் பாதிப்பால் துன்பம் அடையாமல் இருத்தல்.

சண்முகம் - ஆறுமுகசுவாமி எல்லாத் திசைக்கும் அருள்புரிதல். அன்பு, ஆளுமை, ஆறுதல் (அமைதி) இன்பம், இளமை, ஈகை, முதலிய நற்குணங்கள் அருளுதல்.

வைரவர் - காவல் தெய்வம்.

நாய் - நன்றியுள்ளதும், காவல் காப்பதும்.

'சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி





# திருப்புகழ்

## சிறப்புப் பாயிரம்



எல்லாரு ஞானத் தெள்ஞரே கேளீர் சொல்
கல்லெல்லாம் மாணிக்க கல்லாமோ - பொல்லாக்
கருப்புகழை கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழை கேட்குஞ் செவி

மாணிக்கம் பூண்பார்க்கு மற்றொருகல் வேண்டுமோ
ஆணிப்பொன் கையுறுவார்க் கையுறவேன் - பேணிப்பின்
செவ்வேல் விநோதன் திருப்புகழ்சிந் தித்திருப்பார்க்கு
எவ்வேலி வேண்டு மினி

சீராந் திருப்புகழைச் செவ்வேள்மே லன்பால்
ஆராய்ந் துரைத்தான் அருணகிரி - நேராக
அந்தப் புகழை யநுதினமு மோதாமல்
எந்தப் புகழோது வீர்



அருணகிரி நாத னகிலதலத் துன்னைக்
கருணையினாற் பாடுங்கவிபோற் - பிரியமுற
ஏறுமோர் புன்கவிகள் வேலோனே நின்செவியில்
ஏறுமோ என்னே யினி.

ஆனமுகவற்கிளைய ஐயா அருணகிரி
தேனனைய சொல்லான் திருப்புகழை -
யான்நினைந்து
போற்றிடவு - நின்னைப் புகழ்ந்திடவும்
பொற்கமலஞ்
சாத்திடவு மோதிடவுந் தா



வேதம்வேண் டாஞ்சகல வித்தைவேண் டாங்கீத
நாதம்வேண் டாம்ஞான நூல்வேண்டாம் - ஆதி
குரப்புகழை மேவுகின்ற கொற்றவன்தாள் போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்



ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம் - மோனவீ
டேறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறிர்க் காமேயிக் கூறு.
ஆறுமுகந் தோறும்அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்று மெழில் தோன்றும் - சீறிவரு
சூரன்முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பால் வழுத்தினோர் பால்

**செந்தில்நாதன் அடிமை**
*திருப்புகழ் தெய்வநாயகம்*
*சுரண்டை, 627 859,*
*தமிழ்நாடு.*

பொருப்பது பொடிப்பட விடுத்திடுகை வேலா
இருப்பிட முனக்கெது எனக்கரு ளியம்பாய்
உருக்கநல் வழுக்குல மொழுக்கமில ரேனுந்
திருப்புகழ் படிப்பவர் மனத்தினி லிருப்பாம்



திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவலு வாலே
ஒருத்தரை மதிப்பதிலை யுன்றனரு ளாலே
பொருப்புக மிகப்பொருது வென்றுமயில் மீதே
தாத்தொரு திருத்தணியில் நின்றபெரு மானே

ஓராறு மாமுகமை உச்சிதமெஞ் ஞான குகன்
பேரால் அருணகிரி பேருலகிற் - சீராருந்
தோத்திரம தாகத் துதிக்குந் திருப்புகழை
ஏத்தினபே ரீடேறுவார்

வள்ளிமண வாளன் மயிலேறும் வள்ளல் தனைத்
தெள்ளுதமி ழானிணைந்து சீர்பெறவே - உள்ளபடி
வைப்பாம் அருணகிரி வாழ்த்துந் திருப்புகழைக்
கற்பார் கரையேறு வார்

அருணகிரி நாதர்பதி ரா யிரமென்
றுரைசெய் திருப்புகழை யோதீர் - பரகதிர்க்க
தேணியருட் கடலுக் கேற்றம் மனதளர்ச்சிக்
காணி பிறவிக் கரம்

திருப்புகழைக் கற்கத் திருப்புகழைக் கேட்கத்
திருப்புகழை நித்தஞ் செபிக்கத் - திருப்புகழை
அர்ச்சிக்க முக்தியெளி தாபுகுமே கூற்றை வென்று
கொர்ச்சிக்க லாமே கெடீ

மடங்க னடுங்குந் தனைச்சுடு மீதென்று மாதிரத்தோர்
அடங்கி நடுங்குவார் சூலா யுதமென்றுசுரார்கடல்
ஒடுங்கி நடுங்குவார் வேலாயுதமென் றரகனுங்கீழ்க்
கிடங்கி னடுங்கு மயிலோன் திருப்புகழ் கேட்டளவே

தருப்புகழ் வல்ல சுரர்மன் நாயகன் சங்காற்குக்
குருப்புகழ் வல்ல குமரேசன் ஷண்முகன் குன்றெறிந்தோன்
மருப்புகழ் வல்ல அருணகிரி பெயர் வள்ளல் சொன்ன
திருப்புகழ் வல்லவர் சீர்பாதத் துளி யென் சென்னியதே

## திருமுருகன் துணை

ஆறுமுகப்பெருமானை நினைத்து அவனை சரண் புக வேண்டி நிற்கும் அடியார்கள் கூட்டம் வெகு கோடி! அவனது அருள் வேண்டி நிற்கும் அடியார்கள் பால் குடம், காவடி, பாதயாத்திரை இன்னும் மிக மிகக் கடினமான வேண்டுதல்களும் செய்கின் றார்கள். இதெல்லாம் பக்தி வழிபாடுதான். இதெல்லாம் நாமாகச் செய் கின்றது. இறை வனுடைய அருளை எளிதில் பெற வழிமுறை நாம் குருவை பெறுவதே நாதா நாத குரு குகன் அவன் தேடி எடுத்த முத்தராம் ரத்தினம் அருணகிரிநாதர் ஆவார்.

திருமுருகன் ஒருவனையேபாடும்நிய மங்கொண்டு பரமபதி விரதநிலையதுவே என உலகுக்கு உணர்த்திய பரமகுருநாதர் அருண கிரிநாதர் சிவயோக நெறியில் பெருஞ்சித்தி பெற்றவர். நாதா என்று முருகனே அழைக்க அருணகிரிநாதன் எனப்பெயர் பெற்றவர் நாத மயமாய் நின்று நாதப்பிரமமாய் விளங்கியவர்.



அருணகிரிநாத சுவாமிகளைத் தாயு மான சிதம்பர சுவாமிகள், அந்தகக்கவி வீரரா கவ முதலியார், வரகவி மார்க்க சகாய தேவர், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், சிதம்பரமுனிவர், கந்தப்ப தேசிகர், இராமலிங்கர், பாம்பனடிகள், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் ஆகியோருடன் இன்று நமது தமிழ் கடவுளாகிய முருகனுக்கு வாரியார் சுவாமிகளின் மாணவியாகிய திருமதி சொல்லரசி தேசமங்கையர்கரசியையும் நாம் கலந்து கொள்வது மிகமிக முக்கியமாகக் கருது கிறேன்.

### இன்னும் ஆன்றோர்கள் பலர் துதி செய்து முருகன் அருள் பெற்றார்!

அருணகிரி நாதர் திருப்புகழ் திருவகுப்பு கந்தர் அந்தாதி, கந்தர் அலங் காரம், கந்தர் அநுபூதி, வேல் மயில் விருத் தங்கள், திரு எழு கூற்றிருக்கை என்ற ஏழு நூல்களைப் பாடினார்.

முருகப் பெருமானிடம் பிரணவ உப தேசம் பெற்றவர்கள் மூவர். சிவ மூர்த்தி அகத்தியனார், அருணகிரிநாதர் ஆவார்கள்.

வேலா சரணம் சரணம் என்மேல் வெகுளாமல் இனி மேலாயினும் கடைக் கண்பார் பருப்பத வேந்தன் மகள் பாலா குறுமுனியார்க்கும் திருப்புகழ் பண்ணவார்க்கும் ஆலாலம் உண்டவர்க்கும் உபதேசித்த என் ஆண்டவனே என்று முரு கார் அந்தாதி கூறுகின்றது.



முருகனடியார்கள் அருணகிரிநாதரை வணங்கினால் முருகனருள் தானே வரும். ஆதலால் மக்கள் அனைவரும் திருப்புகழ் பாட வேண்டும் என்றில் திருப்புகழ் அன்பர்கள் என்ற அமைப்பை நாடி உலகமக்கள் அனைவரும் பாடலாம். முருகனின் அருளை வெகு எளிதாக எல்லோரும் பெறலாம்.

ஆகவே எல்லோரும் குருவடிவாகி வந்த குகன் அருளால் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரின் திருப்புகழைப் பாடியும், கேட்டும் உள்ளத்தால் முருகன் அருளை உணர்ந்தும் உயர்வான மனிதப் பிறப்பின் பூரணலட்சியத்தைக் கந்தன் அருளாற் பெற்று நலம் பெறு வோமாக.

## திருப்புகழ்
## திருச்செந்தூர்

இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே
மயில் தகர்க லிடைய ரந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலை மலை யனைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவ னிளைய கந்தப் பெருமானே.



# இறைவன் அவனே முழுமுதற்கடவுள்!



அழகன் முருகன் முகத்தினைப் பார்த் தேன் அன்பின் சிரிப்பை உதிர்த்தான் மகிழ்ந் தேன் காந்தக் கண்கள் கடைக்கண் பார்வை புருவம் தாழ்த்தி கவர்ந்தான் உள்ளம் அபயக்கரத்தை உயர்த்திய குமரன் அழகிய வேலின் துணை உனக்கென்றான் இளமையின் பொலி வாய் விளங்கிய வேலன் மனதினில் இளமை பெற்றிடு என்றான்.

அழகிய மயில் தன் வாகனமாகக் குன்று கள் தேடி குடியமர் குகனென் குறைகளின் போது நிம்மதி எங்கோ பறந்திடு அங்கே சுகமுனக்கென்றான். சீறிடும் சர்ப்பம் காலடி நசுக்கி ஆணவம் அடக்கு அடங்கிடு என்றான் அநீதியின் வடிவில் அடங்கிடார் எவரும் அடங்கியே ஒழிவர் வேலவன் உன்னால் கந்தா முருகா கதிர்வடிவேலா எம்தம் வினைகள்


செங்காலன், சென்மார்க்கிறெத்தன்
சுவிற்சர்லாந்து

களைவாய் முருகா உன்தாள் பணிவோம் அருள்நாம் பெறுவோம் உந்தன் ஒளியைத் தருவாய் முருகா ஞானக்குழந்தாய் எம்திரு முருகா ஜோதிப்பிழம்பின் திருவுருநீயே கார்த்திகைப் பெண்டிர் அருள்மிகு பாலன் சரவணப் பொய்கை உதித்திடு முருகா திருத்திகைத் திருநாள் தோன்றிய கந்தா அரிவையர் துயர்கள் தீர்த்திடும் முருகா அம்மையின் அணைப்பில் ஆறுயிர் பெற்றாய் ஆண்டவன் மடியில் அமர்ந்திடும் முருகா. கந்தபுராணக் கதைகளின் தலைவா ஷஷ்டியின் பேறாய் பேற்றை யளிப்பாய் சூரசங்காரன். எம்பெருமுருகன் இருளினை அகற்றி ஒளிதரு பெருமான்.

தத்துவப் பிழம்பாய் சுடரொளி தந்து புத்துயிர் என்னுள் நித்தமும் தருவாய் எத்தனை பிறப்பு நானெடுத்தாலும் உந்தன் பாதம் தொழுதின்புறுவேன். தமிழன் சேரும் தரிப்பிட மெல்லாம் அழகன் முருகுன் தனிப்பெரும் தெய்வம். சைவம் தழைக்க வழிவகை ஊட்டும் இறைவன் அவனே முழுமுதற் கடவுள்!

**கலாநிதி நல்லதம்பி சிவச்செல்வன்**
(ஆக்லாந்து, நியூசிலாந்து)







### லண்டன் கற்பகபதி விநாயகர் கோவில்

தெய்வத்திருமேனிகள்தர்சனத்தால்துன்பம்குறைகிறது. சைவ சமயத்தில் இறை மூர்த்தங்களுக்குக் குறைவில்லை. சிவனது மூர்த்தங்கள் இருபத்தைந்து சிறப்புடையவை. சக்தி மூர்த்தங்களும் ஏராளம் உண்டு. பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன் என மணிவாசகசுவாமிகள் அருளினார். எவ்வளவு தெய்வ மேனிகள் இருந்தாலும் அவையாவும் எமது ஆன்ம சுத்தியைச் செய்து அருட் சக்தியைத் தர வல்லவை.

வேதங்கள் ஆகமங்கள் இதிகாசங்கள் புராணங்கள் என்பவை இறை அருள் மூர்த்தங் களை எமக்குத் தந்த மூலதனங்கள். இவற்றுள் வடமொழி நூலான கந்தபுராணம் முருகனின் அவதாரப் பெருமையைத் தந்த நூல். முருகனைப் பற்றி வடமொழி நூல்களும் தமிழ் நூல்களும் நிறையச் செய்திகளை





எமக்கு அளித்துள்ளது. முருகன் தமிழ்க் கடவுள் என்று நாம் போற்றும் அதே வேளையில் வடமொழி எனப்படும் சமஸ்கிருத நூல்களும் சமஸ்கிருத அருளாளர்களும் பல நூல்களைக் கொடுத்துள்ளனர். உதாரணம் காளிதாசர் அருளிய குமார சம்பவம் ஆதி சங்கரர் அருளிய சுப்ரமணிய புஜங்கம் முதலியன ஒரு சிலவாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அருணகிரி நாதர் அருளிய திருப்புகழ் முதலான பலநூல்களில்தமிழ், சமஸ்கிருதம் கலந்த பாடல் வரிகள் முருகன் அருளால் வருவது எமக்குள் இருக்கும். வடமொழி தென்மொழி வேறுபாடு அகல வேண்டும் என்பதை முருகன் அறிவுறுத் தும் தன்மை புலப்படுகிறது முத்தைத்தரு பத்தி திருநகை அத்திக்கிறை சக்தி சரவண முத்திக் கொரு வித்துக்குருபர என்பதில் வடமொழி தென்மொழி மணிப் பிரவாளத்தைக் காண லாம்.

திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம் என்னும்நூல்கள் வடமொழி தென்மொழிப் பாலங்கள்.

இங்கு குறிப்பாக வேல் மயில் என்பவற் றின் மகத்துவம் பற்றி ஒரு சிறு நோக்கம் செய்வோம். ஒவ்வொரு தெய்வங்களுக்கும் சில சிறப்பு அடை யாளங்கள் உண்டு. வேலும் மயிலும் முரு கனின் தனிச்சின்னம். கந்தர் அநு பூதியில் ஆடும் பரிவேல் அணிசேவலெனஇங்கு பரி என்பது மயில் ஆகும். வேல், மயில், சேவல் குறிப்பிடப்படுகிறது.

தெய்வங்கள் தாங்கும் ஆயுதங்கள் எமது தீவினைநோயை அகற்றவே என்பது உண்மை. எவ்வாறு மருத்துவர்எமது உடலில் உள்ள நோய்க் கட்டிகளைக் கூர்மையான ஆயுதங்களைப் பயன்படுத்தி அறுவைச் சிகிச்சை செய்து சுகம் தருகிறார்களோ



அதேபோன்று இறை ஆயுதங்களும் எமது கொடுவினைகளைக் களைந்து சுகம் தரும். இதனையே சுலபமாக வேலுண்டு வினையில்லை என்பார்கள். கைவாய் கதிர்வேல் முருகன் கழல் பெற்று உய்வாய் மனனே என்று மெய்வாய்விழி நாசியோடும் செவியாம் ஐவாய் வழி செல்லும் அவா வினையே என்றும் வினை அகற்றும் வேல் பற்றிக் கூறப்படுகிறது.

வேல் என்றால் வெற்றி தருவது இதனால் வெற்றிவேல் என்றும் கூறுவது உண்டு. அறிவின் அடையாளமாக ஞானசக்தியாக வேல் போற்றப்படும். அறிவினால் பல வெற்றிகளை நாம் அடைய லாம். ஆணவத்தினால் அழிவை நாம் அடைவோம் என்பதே சூரன்போரில் வேல் காட்டும் தத்துவம்.





மயில் அன்பின் அடையாளம், அழகின் உருவம். ஆனந்தத்தின் வடிவம் ஒருவர்க்கு அன்பு தான் அழகு. அவ் அன்பை முருகன் தனக்கு வாகனமாக்கிக் கொண்டார். அன்பிருந்தால் எதிலும் வெற்றி, எதிலும் அழகு. இதனால் கிடைப்பது ஆனந்தம். மற்றும் ஒரு சிறப்பு எந்தத் தெய்வத்திற்கும் இல்லாத பெருமையாக முருகனின் ஆயுதம், வாகனம் மக்களுக்குப் பெயராக உண்டு. வடிவேல், ஞானவேல் வேலும்மயிலும், வேலாயுதம், ஆனந்தவேல் இப்படிப் பல. அதேபோல் மயூரம் என்றால் மயில். மயூரநாதன், மயூரி, கானமயில், மயில்வாகனம். எனவே வேலும் மயிலும் எவ்வளவு பெருமையுள்ளவை தெய்வப் பெயர்கள் சாதாரணமாக இருக்கும் வாகனமும் ஆயுத மும் பெயராக இருப்பது இங்கு கவனிக்க வேண்டியது.


அருணகிரிநாத சுவாமிகளும் வேல் மயில் என்பவற்றிற்கு விருத்தம் பாடி அருளி னார். இப்பாடல்களில் வடமொழியும் தென்மொழியும் இணைந்து முருகன் சிறப்பைக் கூறும் பெருமையை உணரலாம். ஒரு பாடல் தனி ஆண்மை கொண்ட நெடுவேல், கங்காளி, சாமுண்டி, வராகி, இந்திராணி, கௌமாரி, கமலாசனக்கன்னி நாரணிகுமாரி, திரிபுரை, பயிரவி, அமலை, கௌரி, காமாட்சி, சைவ சிங்காரி, யாமளை, பவானி, கார்த்திகை, கொற்றி, திரியம்பகி அளித்த செல்வச் சிறுவன் ஆறு

முகன் முருகன் நிருதர்கள் குலாந்தகன் செம் பொற்றிருக்கைவேலே.

அதாவது பல்வேறு சக்தி அம்சங்களை உடையவளாகிய பார்வதி தேவியின் புதல்வனாகிய முருகனுடைய கைவேல் அசுர சக்தியை அதாவது தீய வினையை அழிக்கவல்லது. இங்கு வேலும் ஒரு சக்தி வடிவம். இதனால் வேலை ஞானசக்தி என்று அழைப்போம். மற்றும் கந்தர் அலங்காரத்தில் தொண்டர் கண்டுண்டிருக்கும் எனும் பாடலில் நிறை வில் அண்டர் விண்டோடாமல் வேல் தொட்ட காவலனே எனக்கூறுகிறார். காவல் தரும் ஒரு சக்தியாக வேல் முருகன் தொட் டார். கந்த ஷஷ்டி கவசத்திலும் தொடக்கத்தில் ஷஷ்டியை நோக்க சரவணபவனார் சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன் எனவும் நடம்செய்யும் மயில்வாகனனார் எனவும் தொடர்ந்து காக்க காக்க என்பதில் கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க முப்பத் திருபல் முனைவேல் காக்க இவ்வாறு எமது உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் வேல் காக்கும் படி வேண்டுகிறோம்.

சுற்றி நில்லாது போ பகையே துள்ளி வருகுது வேல் என்றார் பாரதியார். எனவே முருக வழிபாட்டில் வேல் பெரும் இடத்தைப் பிடித்த சிறப்பை உணரலாம்.

மயில் தனிச் சிறப்பு வாய்ந்தது. காவடி எடுக்கும் அன்பர்கள் மயிலிறகு வைத்து ஆடுவார்கள் ஒருவகையில் முருகனின் வாகனம் என்ற காரணம் இருந்தாலும் மயில் இறகில் பட்டு வரும் காற்று எமக்குப் புத்துணர்வைத் தருகிறது. உற்சாகத்தைத் தருகிறது. இதனால் காவடி எடுப்பவர்களின் சோர்வு நீக்கப்படுகிறது.



இங்கு ஒரு விடயம் நாம் சுட்டிக்காட்ட லாம் படிக்கும் காலத்தில் மயில் இறகை பாடப் புத்தகத்தில் வைத்தால் நன்கு படிப்பு வரும் என்ற நம்பிக்கை இருந்ததை சிந்தித்தால் அதுவும் மாணவர்களுக்கு உற்சாகம் கொடுக்கும். அவர்களுடைய சோம்பலை நீக்கும் என்பது தான். நாடு செழிக்க மழை அவசியம் மேகம் கறுக்கும் போது மயில் ஆனந்தம் அடைந்து தோகை விரித்து ஆடுகிறது. எனவே உலகம் உய்ய மயில் விரும்புகிறது.

அருணகிரிநாதர் அருளிய மயில் விருத்தம் ஒன்றைப் பார்ப்போம். சிவனை வலம் வரும் அளவில் உலகடைய நொடியில் வரு சித்திர கலாப மயிலாம் மந்தாகினிப் பிரபவ தரங்க விரதங்கவன சரோதய கிர்த்திகா வர புத்திர ராஜீவ பரியங்கதந்தியவராசலன் குலிசாயுதத் இந்திராணி மாங்கல்ய ரக்ஷாபரண இகல் வேல் அருள் கூர் இமையகிரி குமரி மகன் ஏறுநீலக் கிரீவரத்னக் கலாப மயிலே.

இங்கு முருகன் உலகை மயிலில் வலம் வந்த காட்சியும் அடுத்து வட மொழியுடன் இணைந்து முருகனின் பெருமையும் மயிலின் வலிமையையும் காட்டப்படும் செய்தியும் காணலாம் எமது மனத் துன்பத்தை துடைப்பவரும் கார்த்திகை மைந்தரும் இந்திராணியின் மாங்கல்யத்தைக் காப்பாற்றியவரும் பார்வதியின் மகனும் ஆகிய முருகன் ஏறுகின்ற நீலக் கழுத்து உடைய பச்சைத் தோகை உடைய மயிலே எனக் கூறுகிறார்.

இவ்வாறு முருக வழிபாட்டில் சிறப்புப் பெற்ற வேலை ஆதி மூலமாகக் கொண்ட கோவில் சுவிஸ் செங்காலன் கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் வெள்ளை மயில் வந்த பெருமையும் சேர்ந்து வேலும் மயிலும் ஆகிய முருகன் சின்னம் அறிவும் அன்பும் ஆனந்தமும் என்றும் தரட்டும்.

**சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்**

*சைவப் புலவர் சைவ சித்தாந்த பண்டிதர்*

















































































## ஈழத்தில் பிரசித்திபெற்ற முருகன் ஆலயங்கள்



நல்லூர்




செல்வச்சந்நிதி



மாவிட்டபுரம்



கதிர்காமம்



# சித்தர்கள் வாழ்வில் முருகக் கடவுள்



**சித்தர்கள் யார்?**

தியானம், யோகம் போன்ற அப்பியாசங்கள் மூலம் தங்கள் புத்தியைக் கட்டுப்படுத்தியவர்களே சித்தர்கள் என்பது சான்றோர் கருத்து. 18 சித்தர்கள் என்ற கணக்கு எப்போதுமே சொல்லப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் உண்மையில் சித்தர்கள் கணக்கு பதினெட்டோடு நின்று விடவில்லை. அகத்தியர் முதல் வள்ளலார் வரை உலகில் அநேக சித்தர்கள் உளர். அவர்களை வெறும் தமிழர்கள் இந்துக்கள் என்று மட்டும் வரையறை செய்யக் கூடாது. பூனைக்கண்ணர் எகிப்து/ இங்கிலாந்தைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறார். போகர் சீனர் என்று சொல்லப்படுகிறார்; யாக்கோபுச் சித்தர் அரேபியாவைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகிறார்; ரோம ரிஷி ரோமாபுரியைச் சேர்ந்தவர் என்ற கருத்து நிலவுகிறது. இப்படி நாடு, நகரம்,

இனம், மொழி ஆகியவற்றைக் கடந்து வாழ்பவர்களே சித்தர்கள்.

சித்தர்கள் கூடு விட்டு கூடு பாய்தல், ஆக்கல், அழித்தல், எதிர்காலம் பற்றி அறிவித்தல், இறைவனையே வசியம் செய்தல் போன்ற ஈசத்துவப் பண்பு நிறைந்தவர்களாக வாழ்ந் தனர். இவர்களுள் பெரும்பான்மையோர் சிவனையே வணங்கியுள்ளனர். ஒரு சிலர் முருகனின் அருளையும் இன்னும் சிலர் அன்னை பராசக்தியின் அருளையும் பெற்ற வர்களாக இருந்திருப்பது சித்தர்கள் வரலாறு மூலம் தெரியவருகின்றது.

## சித்தர்களும் முருகக் கடவுளும்




முருகப் பெருமான் சித்தர்களுக்கு அருள்பாலித்துள்ளார்; சித்தர்கள் முருகனின் அருளைப் பெற்றவர்கள். இத்தகவல் கந்த ஷஷ்டி கவசத்தில் இரண்டாவது வரியில் காணப்படுகிறது.

**ஷஷ்டியை நோக்கச் சரவண பவனார்**
**சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்**

இவ்வரிகளில் இருந்து சித்தர்களுக்கு அருள் செய்யும் கருணைக் கடலாக இருப்பவர் கந்தக் கடவுள் என்பது தெரியவருகின்றது. இனி அகத்தியர், போகர், வள்ளலார், அருணகிரிநாதர் போன்றவர் வாழ்வில் முருகக் கடவுள் எவ்வாறு அருள் செய்தார் என்பதையும்; அவர்கள் முருகனை எவ்வாறு போற்றிப் பணிந்தனர் என்பதையும்; அந்த வள்ளி மணாளனுக்கு அவர்கள் செய்த சேவை எத்தகையது என்பதையும் காண்போம்.

## அகத்தியர்

அகத்தியர் சப்தரிஷிகளில் ஒருவராகவும் சித்தர்களில் முதன்மையானவராகவும் அறியப்பெறுகிறார். தேவமங்கை ஊர்வசியின் மேல் மையல் கொண்ட சூரியன் ஒரு குடத்தில் தமது இந்திரியத்தைச் செலுத்தினார். அந்தக் குடத்திலிருந்து பிறந்தவர் அகத்தியர் என்பது வரலாறு. தமிழின் தலைமகன் என்று போற்றப் பெறுவர் அகத்தியர். இவர் சிவபெருமானிடமிருந்து தமிழைக் கற்றதாக ஒரு சாரம் முருகப் பெருமானிடமிருந்து தமிழைக் கற்றதாக மற்றுமொரு சாராரும் கருத்துப் பகர்வர். தேவராய சுவாமிகள் இயற்றிய



பழனிப் பதிவாழ் அப்பன் கந்தர் ஷஷ்டி கவசம் மூன்று என்ற நூலில் காணப்படும்.

## அகத்திய மாமுனிக் (கு) அருந்தமிழ் உரைத்தவா

என்ற வரியில் முருகப்பெருமான் அகத்தியருக்குத் தமிழ் கற்பித்தவர் என்ற சான்று கிடைக்கப்பெறுகின்றது. ஒரு சமயம் அகத்தியர் குமரக் கடவுளிடம் இறைவா மக்கள் தேக நலத்துடன் இருந்தால் மட்டும் போதுமா? என்று கேட்டார். அகத்தியர் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கக் காரணம் மக்கள் உடல் நலத்தோடு இருந்தால் போதாது. அவர்கள் ஆன்ம பலமும் பெறவேண்டும் என்பதற்காகவே ஆகும். அகத்தியர் இதனை நேரடியாகக் கேளாவிடினும் அவரது உள் நோக்கத்தைப் புரிந்து கொண்ட முருகன் அவருக்கு முக்காலமும் உணரக்கூடிய மந்திரம் ஒன்றை உபதேசித்ததாகக் கூறப்படுகின்றது. இதிலிருந்த சித்தர்களின் வாழ்வில் ஒன்றிக் கலந்து விட்ட முருகப்பெருமான் அவர்கள் கேளாமலேயே அவர்களது தேவையறிந்து அருள் செய்துள்ளார் என்பது தெரிய வருகின்றது.

சிவபெருமானின் திருமணத்தினைக் காண அனைவரும் வடதிசைக்கு வந்தமையால் இறைவனின் ஆணைப்படி அவர் தென்திசைக்குச் சென்று அதைச் சமன் செய்ததாகப் புராணம் கூறுகின்றது. அப்படி வந்த அவர் தென்திசையில் பொதிகை மலையில் தங்கியுள்ளதாகவும் அங்கே முருகனின் ஆணைப்படி அகத்தியம் என்ற நூலை இயற்றியதாகவும் கூறப்படுகின்றது.

இது தவிர முருகனின் அருளும் ஆசியும் பெற்ற அகத்தியர் முருகனின் பெருமைபாடும் இரு நூல்களை இயற்றியுள்ளார். அவை

* சண்முகசாலம்
* ஆறெழுத்தந்தாதி

இதிலிருந்து அகத்திய மகாசித்தரின் வாழ்வில் குமரக்கடவுளின் பங்கு எவ்வளவு ஆழமாக அமைந்திருந்தது என்பது தெரிய வருகின்றது.

## போகநாதர்/போகர்

தமிழகத்தில் வேட்கோவர் குலத்தில் பிறந்தவர் போகர். இவரது காலம் 5000 ஆண்டுகளுக்கு முன்பு. ஒரு சாரார் இவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்றும் பின்னர் சீனாவிற்குச் சென்று ஆன்மீக கொள்கைகளைப் பரப்பினார் என்றும்; மற்றுமொரு சாரார் இவர் சீனர் என்றும் ஆன்மீகக் கொள்கையைப் பரப்பத் தமிழ் நாடு வந்தார் என்றும் கருத்து பகர்வர். சித்தர்களுள் முருகப்பெருமானுடன் அதிக தொடர்புடையவர் இவரே. காரணம் மற்றச் சித்தர்கள் எந்தச் சமயத்தையும் சாராமல் எந்த கோவில்களுக்குள்ளும் செல்லாமல் இறைவனைத் தங்களுக்குள்ளாகவே கண்டனர். ஆனால் போகரோ பழனி மலை முருகனைத் தியானித்தவர். தமது சீடர் புலிப்பாணி சித்தருடன் பழனி மலை

மேல் தாம் அமைத்த திருக்கோவிலில் நவபாஷாண கட்டினால் முருகன் சிலையை அமைத்தவர். (இன்றும் பழனி மலை முருகன் கோவிலில் அந்தச் சிலைதான் பக்தர்களால் வழிபடப்பட்டு வருகிறது.) இப்படி நவபாஷாணத்தால் சிலை அமைத்த போகர் முருகனை மட்டும் நினையாது அவரது பக்தர்களின் தேக நலனில் அக்கறை கொண்டிருந்தார் என்பது தெரிய வருகிறது. காரணம் இந்த நவபாஷாண சிலையின் அபிஷேகத் தீர்த்தத்தை அருந்தினால் பல வகை உடற்பிணிகள் தீரும் என்பது





அறிவியல் உண்மை. பழனி மலை முருகனின் சந்நிதியில் உள்ளே தென்மேற்கு மூலையில் போகரின் ஜீவசமாதி அமைந்திருக்கும் அளவுக்கு அவர் முருகனோடு ஐக்கியமான வர். இத்திருக்கோயிலிலிருந்து தண்டாயுத பாணி திருவடி நிலைக்கு ஒரு சுரங்கப்பாதை அமைந்துள்ளது. ஒருநாள் இந்த சுரங்கப் பாதை வழியாக சென்ற போகர் திரும்பாமல் இதனுள் அமர்ந்து விட்டார் என்பர். அவன் அருளாலே அவன் தாள் வணங்குதல் வேண்டும் என்பர். அந்த அடிப்படையில் முருகனுக்காக இவ்வளவு சேவைகள் செய்த போகர் முருகனின் பூரண அருள் பெற்றவராகவே இருந்திருப்பார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## வள்ளலார் என்கிற இராமலிங்க சுவாமிகள்

மனித நேயமும் உயர்ந்த சிவ ஞானமும் பெற்றவர் வள்ளலார். இவர் 1823ஆம் வருடம் பிறந்தார். தந்தை இராமையாபிள்ளைதாய்சின்னம்மை. இவர் ஜோதி வழிபாட்டை வலியுறுத்தினாலும் ஆரம்ப காலத்தில் முருகனை வழிபட்டார் என்பது இவரது வரலாற்றிலிருந்தும் இவர் புனைந்த சில பாடல்களிலிருந்தும் தெரியவருகின்றது. இவரது பாடல்கள் சிலவற்றுள் சென்னை கந்தக்கோட்டத்து முருக னின் பெயர் இடம் பெற்றுள்ளது.

மேலும் ஆன்ம நாட்டம் கொண்டு தியான அப்பியாசம் செய்த காலத்தில் முருகக் கடவுள் இவருக்குக் காட்சி



தந்த செய்தியும் இவரது வாழ்க்கையில் நிகழ்ந்துள்ளது. சிறு வயது வள்ளலார் தனி அறையில் கண்ணாடி வைத்து வழிபடுவது வழக்கம். ஒவ்வொரு நாளும் நிலக்கண்ணாடியில் தமது உருவத்தை அவர் காண்பார். ஒருநாள் அந்தக் கண்ணாடியில் அவரது உருவத்திற்குப் பதில் முருகனின் திருவுருவத்தைக் கண்டதாகக் கூறப்படுகின்றது. இதே சம்பவத்தை மற்றுமொரு சாரார் வள்ளலார் தமது கண்களை மூடித் தியானித்த போது தமது கண்ணாடியில் முருகனின் திருக்கோலத்தைக் கண்டதாகவும் கூறுவர். எது எப்படியாகிலும் வள்ளலார் வாழ்வில் முருகனின் பங்கு உள்ளது என்பதற்கு இந்தச் சம்பவம் தக்கசான்றாக அமைகின்றது.

## அருணகிரிநாதர்

அருணகிரிநாதர் தமிழ் நாட்டில் திருவண்ணாமலையில் கி.பி 15ஆம் நூற்றாண்டில் பிறந்து வாழ்ந்தவர். இவர் முருகக் கடவுள் மீது பாடல்கள் எழுதிப் புகழ் பெற்ற அருளாளர். திருவண்ணாமலையில் பிறந்த இவர் தாய் தந்தையரை இழந்ததும் அவரது தமக்கை யாரால் வளர்க்கப்பட்டார். சிறு வயதில் இருந்தே பெண்ணாசை கொண்டவராய் இருந்த இவர் வீட்டிலே கட்டிய மனைவி இருந்தும் வெளியில் பரத்தையருடனே காலம் கழித்தார். அதன் விளைவாகச் சொத்தை இழந்ததோடு மட்டும் அல்லாமல் பெரு நோயும் வந்து சேர்ந்தது. அந்நிலையிலும் பெண்ணாசை விடவில்லை. ஒருநாள் கட்டிய மனைவியைக் கட்டி அணைக்க முற்படுகிறார். ஆனால் மனைவி இவரை வெறுத்து ஒதுக்குகிறார். அந்நேரம் அவரது தமக்கை தம்மை பெண்டாளுமாறு கோபத்துடனும் வேதனையுடனும் கூறுகின்றார். இதனால் அவமானப் பட்டு மனம் நொந்து அருணகிரிநாதர் வீட்டை விட்டு வெளியேறுகின்றார்.

வழியில் ஒரு பெரியவரை இவர் சந்தித்தார். அவர் தான் அருணாசலேஸ்வரர் என்று சிலரும் குமரக் கடவுள் என்று சிலரும் கருத்து பகர்கின்றனர். அந்தப் பெரியவர் கந்தனின் பெருமையை அருணகிரி நாதருக்குக் கூறுகின்றார். மேலும் சரவண பவ என்ற ஆறெழுத்து மந்திரத்தின் பெருமையையும் உட்பொருளையும் தத்துவத்தையும் விளக்கிச் சொல்லி முருகனைச் சரணடையுமாறு வழி காட்டிச் செல்கின்றார். ஆயினும் அருணகிரி நாதரின் குழம்பிய மனம் அவரை அலைக் கழித்தது. அதன் காரணமாக அவர் தாம் தவம் செய்த திருவண்ணாமலைக் கோயில் கோபுர வாசலில் இருந்து விழுந்து உயிர் விட முற்பட்டார். அப்போது முருகப்பெருமானே வந்து இவரைத் தாங்கிப் பிடித்ததாகக் கூறப் படுகிறார். ஒன்றும் அறியாது விழித்த அருணகிரிநாதருக்குக் குமரக்கடவுள் தமது திருக்கோலத்தைக் காட்டி அருளினார். பின்னர் முருகனே தமது வேலால் அவர் நாவில் சரவணபவ என்னும் ஆறெழுத்து மந்திரத்தை எழுதி, யோக மார்க்கங்களும், மெய்ஞ்ஞானமும் அருளினார்.

தொடர்ந்து அருணகிரிநாதரை இறை சேவை செய்யுமாறு பணிக்கின்றார் முருகன். அருணகிரியாரோ தமக்குப் பாடல் புனையும் ஆற்றல் இல்லை என்று கூறவே முருகப்பெருமானே முத்தைத்தரு பத்தித் திருநகை...' என அடியெடுத்துக் கொடுத்ததாகக் கூறப்படு கிறது. இது தவிர முருகனை நினைத்து மௌன மாக தவமிருந்ததன் பலனாக இவரது தொழு நோயும் நீங்கி அழகிய தேகம் பெற்றார் என்று கூறப்படுகின்றது.

விஜயநகர வம்சத்தைச் சேர்ந்த பிரபுதேவராயன் என்ற மன்னனின் ஆஸ்தான பண்டிதன் சம்பந்தாண்டான். இவர் அருணகிரியார் மீது காழ்புணர்ச்சி கொண்டார். சக்தி உபாசகரான இவர் ஒரு முறை அருணகிரி யாரைப் போட்டிக்கு அழைத்தார். தனது ஆன்மீக சக்திக்கு கட்டுப்பட்டு அம்பாள் காட்சி அளிப்பாள் என்றும் அதுபோல் அருணகிரியார் பக்திக்குக் கட்டுப்பட்டு முருகப்பெருமான் காட்சியளிப்பாரா என்றும் சவால் விடுத் தார். அவரது ஆணவம் காணமாக அம்பாள் காட்சி தரவில்லை. அருணகிரி யாரோ மணிரெங்கு' என்று தொடங்கும் திருப்புகழைப் பாடினார். அவரது பணிவுக் கும் பக்திக்கும் கட்டுப்பட்டு முருகன் காட்சியளித்ததாக ஆன்மீக வரலாறு சான்று பகர்கின்றது.





இது தவிர அருணகிரிநாதரின் கைகளில் ஆறு விரல்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இது குமரக்கடவுளின் ஆறுமுகங்களையும் சரவணபவ' என்ற ஆறெழுத்து மந்திரத்தையும் நினைவுறுத்தும் வண்ணம் இருப்பதாகக் கூறுவர். இந்த அங்க அமைப்பு இவர் குமரனின் கடாக்ஷம் பெற்றவர் என்பதைக் காட்டுகின்றது.

## முடிவு

இப்படியாக சித்தர்கள் வாழ்வில் முருகனின் திருவிளையாடல் பலவாறாக அமையப் பெற்றிருந்தமையும் அவர்கள் முருகனின் பால் கொண்டிருந்த அளவற்ற அன்பையும் அதன் பலனால் ஆற்றிய சேவையையும் அறிய முடிகின்றது.

## மேற்கோள் நூல்

சி.எஸ். தேவநாதன். (2011) சித்துகள் பல செய்த சித்தர்களின் கதை. ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ். சென்னை.

# அல்லற்படுவோருக்கும் உதவும் கதிர்வேலன்

உலகெலாம் உள்ள எம் முருகனின் பக்தர்கள்
உந்தித் தள்ளிய ஆவலால் சேர்ந்திங்கு
நில வுல குய்யவும் நேர்மைகள் நிலைக்கவும்
நீண்ட நாள் நிலைத்திடும் நின் பணி செய்தனர்

இந்துமா மதத்தினில் பல தெய்வம் இருந்தாலும்
எங்களின் தமிழ்த் தெய்வம் முருகன் என்பதால்
குன்றுகள் தோறுமே கோயில்கள் அமைத்துக்
கொண்டாடினர் எங்கள் குல வழிவந்தவர்

எங்கே போகினும் அங்கே இறைவனை
எடுத்துச் சென்று வணங்கிடும் வகையில்
சுவிஸிலும் சென் மாக்கிறெத்தனில் ஒரு பதி
கதிர்வேலாயுத சுவாமிக்கும் நிறுவினர்

கால காலத்துப் பூசைகள் பஜனைகள், யோகவகுப்புகள்
காலக்கிரமத்தில் செய்துமே ஒரு முழுக்
கோயிலாய் ஆக்கினர் கூடிய பக்தர்தம்
கொடுந்துயர் போக்கியே தடுத்தாட் கொண்டனன்

ஆன்மீகம் பக்தி ஆலய வழிபாடு அறநெறி
வழி நின்று அல்லல் படுவோர்க்கு ஆவன செய்த இம்
மேன்மை கொள் திருப்பதி முருகபக்தி மாநாடு கூட்டிட
ஆவண செய்ததை அரங்கேறச் செய்தனர்

முருகனின் மகிமையை மூத்தவர் அவன்மேல்
பாடிய தன்மையை பானில் நிலைத்திட
மெருகேற்றிப் போற்றி எம் மெய்யடியார்கள் தம்
கருவறை ஏகிட காலத்திற் கேற்றற் போல்

பக்குவமாய் அவை பாதுகாத்திட வென்றே
கற்றவர் ஒரு சபை கூட்டியே கலந்தனர்
திக்கெட்டும் பரவிடும் தேவாரம் திருப்புகழ்
மற்ற ஊல் மகிமைகள் மதிப்புரை செய்திட

மலேசியத் தமிழர் தம் மாண்புறு செயலுக்கு - சென்
மாக்கிறெத்தன் பதி தர்மகர்த்தா சபை தன்னால்
ஏலும் வகைக்கும் எல்லா உதவியும்
சீரும் சிறப்புற செய்திடும் வேளையில்

மாநாடு வாழ்க அதன் மகிமை வாழ்க
தேனாடும் தேவர்குலக் கந்தன் வாழ்க
பாரெல்லாம் பந்துபட்ட பக்தர் வாழ்க
பசிப் பிணியும் படுந்துயரும் பறந்து போக

வான் பொழிக தளங் கொழிக்க வாழ்க வாழ்க
வையத்துள் வாழ்வாங்கு வாழ்க வாழ்க

**சின்னப்பா ஆனந்தராசா**




செங்காலன், சென்மாக்கிறெத்தன்
சுவிற்சாலாந்து





# குழகனின் குறும்புகள்

## குறும்பர்

குறும்பர் என்பது குறுநில மன்னர், ஒருவகைச் சாதி இனத்தவர்; வேடர், குறும்பிடையர்; குறும்புக்காரர், குறும்புத் தனம் நிறைந்தவர் என்றெல்லாம் விளக்கம் அளிக்கப்படுகிறது. குறும்பின்மை என்றால், துன்பம் விளைவிக்கும் குறும்பரசர் இல்லா லமை யாகிய நாடமைதி வகை என்பர்.

குறும்பு என்பது பாலை நிலத்தார், ஊர், குறு நிலமன்னர், பகைவர், சிறியதுணுக்கு, அரண் வலிமை, குறும்பர் சாதி, குறும்புத் தனம், போர் என்றெல்லாம் விளக்கம் தருவதுடன் குறும்பாடு என்பது குறும்புத்தனம், ஒரு வகை ஆறு என்றும் விளக்குகிறார். தமிழர் முனைவர் ச. வே. சுப்பிரமணியன் (மெய்யப் பன் தமிழ் அகராதி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - *600 108*)



பொதுவாக குறும்பு என்பதைச் சிறு விளையாட்டு என்று கூறலாம். பாலை நிலப் பகுதியில் வாழ்ந்திடுவோர் வாழ்க்கையா தாரமாய் எதையும் பெற்றில்லாத நிலையில் அவ்வழியே பயணிப்போர் வரும்போது அவர்களைச் சூழ்ந்து, அச்சுறுத்தி, உயிருக்கு ஊறு ஏற்படுத்தாமல், பொருள்களைப் பறித்துக் கொண்டு விடுவித்து அனுப்பி விடுவர். காலப்போக்கில் குறும்புகள் செய்து வாழ்க்கையைத் தொடர்ந்தவர்களைக் குறும்பர் என்று அழைத்திடும் வழக்கு நிலவியது. கூட்டமாகச் சேர்ந்து வாழ்ந்திடும் நிலை ஏற் பட்ட பின் தங்களுக்கென்று தனி அரசை ஏற்படுத்திக் கொண்டனர். பல்லவர் காலத்திற் குப் பின் குறும்பர்கள் சிதறி வாழத் தொடங்கினர். எனினும் குறும்பு என்பது சிறு விளையாட்டையே குறித்ததுடன் ஒரு வகையான நடத்தையையும் குறிப்பதாயிற்று எனலாம்.



## குறும்பு

தமிழ் மக்கள் தங்கள் குழந்தைகளைச் செல்லமாக வளர்க்கும் முறைமையைப் பல்வேறு இலக்கியங்கள் இயல்பாக எடுத்துக் கூறுகின்றன. குறுகுறுப்பான குழந்தையே சுறுசுறுப்பான குழந்தையாகிறது. குழந்தைகளின் குறும்புகளைப் பலரும் விரும்பிச் சுவைப்ப துண்டு. பாண்டியன் அறிவுடை நம்பி (புற நானூறு 188இல்)

'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அட்சில் மெய்பட விதிர்க்கும்
மயக்குறு மக்கள்'

என்று பாடியுள்ளான்.

## பிள்ளைத் தமிழ்

சிற்றிலக்கியங்கள் 96, அவற்றில் பெரியவர்களையும், மன்னர்களையும், தெய்வங்களையும், குழந்தைகளாகக் கருதி பாடப்படும் பிள்ளைத் தமிழ் இலக்கியம் சிறப்பு மிக்கவையாகும். தொடக்க நாள்களில் பிள்ளைத் தமிழில் பப்பத்துப் பருவங்களாக, பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவி பாடப் பெறுகின்றனர். இந்தப் பத்துப் பருவங்களில் குறிப்பாக செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றில் பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவம் ஆகியவை குழந்தையின் குறும்புகளையும் பேசுகின்றன. குழகன், குமரன் எனும் முருகப் பெருமானைக் குழந்தையாகப் பாவித்துப் பாடப் பெற்றுள்ள பிள்ளைத்


தமிழ் நூல்களில் குமரகுருபர சுவாமிகள் பாடியுள்ள வைத்தீசுவரன் கோயில் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், பகழிக் கூத்தர் பாடிய திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவையாகும்.

## அணிமணிகளுடன் அழகன்

முருகப்பெருமானைப் புள்ளிருக்கு வேளூர் பிள்ளைத் தமிழில், செங்கீரைப் பருவத்தின் ஏழாவது பாடலில் குழந்தை அணிந்துள்ள அணிமணிகளையும், அழகுத் தோற்றத்தையும் குமரகுருபரர் அழகுபடப் பாடுகிறார். குழந்தையைப் பாடினாலும் தெய்வத்தைப் பாடுவதால், பாதாதிகேச (அடி முதல் முடி நுகர்ச்சி) வருணனையாகப் பாடுகிறார். செம்பொன்னடி, திருவரை, தொந்தி, நுதல் (நெற்றி), காது, உச்சி என்று பாதந்தொட்டு உச்சியாகப் பாடுகிறார்.

பரிதி மண்டலம் ஒளிப்பிழம்பு சூழ (நெற்றிப் பட்டம் உடையவன் முருகன். உமையன்னையும் தன் குழந்தைக்கு அணிமணி நகைகள் அணிவித்து அழகு பார்க்கிறாள்.

செம்பொன்னால் செய்யப்பட்ட பெரிய (குழலிற் பெய்த பருக்கைக் கற் களாகிய ஒலி செய்யக் கூடிய) கிண்கிணிகள் சிலம்புகளுடன் கலின் கலின் என ஒலிக்கின் றன. திருவரையாகிய இடுப்பில் உடைமணி (அரை மணி) கிணின் கிணின் என்று ஒலிக் கின்றன.



தோள்களில் வாகு வலயங்கள் ஒலிக் கின்றன. அழகிய பொன் நிறமான அகன்ற மார்பில் அணிந்துள்ள சன்ன வீரமும் ஆரமும் அழகிய ஒளியை வீசுகின்றன.


செவிகளில் அணியப்பட்ட மகர மீன் வடிவிற் செய்யப்பட்ட சிறப்பான

குண்டலங்கள் சூரிய மண்டலம் போல் பரந்த ஒளிப் பிழம்பை வீசுகின்றன.

நெற்றியில் பசும் பொன்னால் செய்யப் பெற்ற ஒளியுடைய சுட்டியும் அத்துடன் கட்டப் பெற்றுள்ள சூழியத் தோடு, நெற்றிப் பட்ட மும் ஒளிவிட்டு வீசுகின்றன. அழகிய தாமரை மலர்ந்தது போல் வதனத்தில், குளிர்ந்த முறு வலாகிய புன்னகை தவழ்கிறது.

இவற்றுடன் தொந்தி சரிய ஆடுகி றான் குமரன். ஐந்து மாதக் குழந்தையான ஐயன், இளம் காற்றில் ஆடிடும் இளங்கீரைத் தண்டைப் போல், அசைந்தாடி வருகின் றான். மழலை மொழிந்து வருகின்றான். அணிமணி கள் ஒலிக்கின்றன. ஒளிர்கின்றன. இக்காட்சியைக் கவிஞர் குமரகுருபரர் நமக்கு அளிக்கின்றார். (செங்கீரைப் பரு வம் பாடல் -2)





## சப்பாணிக் கொட்டுதல்

சுவாமிகள் சப்பாணிப் பருவத்தின் கடைசிப் பாடலில் சில குற்றேவல்களைக் குறும்பாகச் செய்கிறான் குமரன் என்று பாடுகிறார். இதனை விளக்கிடும் வித்துவான் மு. முருகையா தேசிகர் கூறுவதைக் காண்போம். (புள்ளிருக்கு வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேக விழா மலர் 1970).

"குதலைச் சொற்களை உடைய வள்ளி நாயகியின் கற்றையாகிய அழகிய கூந்தலுக்கு முருகன் அகிற்புகையூட்டினான். பூமாலை அணிவித்தான். நெற்றியில் தோன்றிய வியர்வையைத் துடைத்தான். கஸ்தூரித் திலகத்தைத் தூரியம் கொண்டு நெற்றியில் தீட்டினான். மென்மையான இளம் மார்பகத்தில் பசுமை யான கலவைச் சந்தனத்தைப் பூசி னான். வள்ளியிடம் குற்றேவல்களை முற் றும் முடித்தான். தோள்களைத் தட்டிக் கொண்டு நடனம் செய்தான். பிறகு இரு கைகளையும் சேர்த்து ஓசையெழச் சப்பாணிக் கொட்டுகின்றான்"

சப்பாணிப் பருவமாவது, குழந்தை பிறந்து ஒன்பதாவது திங்களில் நிகழ்வ தாகும். திருமகளின் மகளாகிய வள்ளியம் மையின் மகிழ்ச்சியைக் கண்டு முருகன் சப்பாணிக் கொட்டினான் என்கிறார் குமரகுருபர சுவாமிகள்.



செங்காலன், சென்மார்க்கிறெத்தன் சுவிற்சர்லாந்து

## முத்தம் தருகவே....

சுவாமிகள் முத்தப் பருவத்தில் முதல் பாடலில் முருகனது வாயினை 'மும்மைத் தமிழ்த் தேர்' 'செங்கனி வாய்' என்கிறார். முருகனது வாய் உமிழ்நீரைத் 'தெய்வ மன முருகு' என்றும் கூறுகிறார். தலை மாலை அணிந்துள்ள சிவ பிரானின் தோள்களில் முருகனது வாயிலிருந்து உமிழ்நீர்ப்படுதலைக் குறிப்பிடுகின்றார். குழந்தை பிறந்து பதினோராம் திங்களில் தம் குழந்தையை, முத்தம்தருமாறு வேண்டுகின்ற பருவமே முத்தப் பருவமாகும். பகழிக் கூத்த ரும் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்.

## ....... கௌரி திரு

முலைப்பால் குடித்த கனிவாயால்
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியும் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே"

என்று பாடுகிறார்.

## வாயூறி நின்ற பெருமான்

குழந்தை பிறந்த ஐந்தாம் திங்களில் ஒரு காலை மடக்கி, ஒரு காலை நீட்டி, இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி, தலை நிமிர்ந்து முகம் அசைய ஆடுவதும், கீர் என்று சொல்லப்படும் சொற்கள், செவ்விய மொழியில் பேசுகின்ற பருவமாகவும், வளருகின்ற கீரைத்தண்டு, இளங்காற்றில் மெல்ல அசைந்தாடுவதைப் போல் தளிர் நடையிடும் குழந்தையின் வாயிலிருந்து உமிழ்நீர் வழிவதாகிய பருவமாகவும் செங்கீரைப் பருவம் உள்ளது. முருகப் பெருமானின் சொல்லுக்காக தேவாதி தேவர்களெல்லாம் காத்திருக்கும் வேளை யில், முருகப் பெருமானோ, வள்ளியின் மொழிக்காகக் காத்திருக்கிறான். இதனைக் "குற்றவேல் செய்யக் கடைக் கண் பணிக் கெனக் குறையிரந்தவள் தொண்டை வாய்த் தேனூறு கிளவிக்க வாயூறி நின்றவன்" என்று குமரகுருபர சுவாமிகள் பாடுகிறார்.

## குறும்பு விளையாட்டுக்கள்

குமரகுருபர சுவாமிகளின் திருப் பாடல்களில்உயர்வு நவிற்சியுடன், உள்ளதை உள்ளவாறே கூறிடும், தன்மை நவிற்சியும் காணப் பெறுகிறது. சுவாமிகள் ஒரு குழந்தை செய்யும் விளையாடல்களையும், குறும்புத் தனத்தையும் புள்ளிருக்கு வேளூர் முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் வருகைப் பருவம் இரண்டாம் பாடலிலும் வருணனை செய்கிறார்.

முருகப் பெருமானாகிய குழந்தை வாயினின்றும் வடிகின்ற தேன் போன்ற உமிழ்நீர் சிவனின் வெள்ளாடை அணிந்த மடியினை நனைத்தது. அக்குழந்தை உமாதேவியாரின் வயிறு குளிரும்படி தவழ்ந்து சென்று தந்தையின் மார்பில் ஏறி குரவைக் கூத்து ஆடியது. அங்கிருந்தபடியே இறைவனின் கையிலுள்ள உடுக்கையினைச் சிறுபறை போலத் தட்டி முழக்கியது.



சிவன் திருக்கரத்திலே ஏந்தியுள்ள தீயினை, அவரது திருமுடியிலுள்ள கங்கை நீரைக் கொண்டு அவித்தது. தந்தையின் தலையிலுள்ள மூன்றாம் இளம்பிறைச் சந்திரனைப்பிடித்து, பிரானது ஆரமாகவுள்ள பாம்பினது வாயில் செருகியது. சிவனது திருமுடியில் உள்ள அறுகம் புல்லை எடுத்து, அவரது கரத்திலுள்ள மானுக்கு அளித்தது. சிவபிரானின் செம்மேனி மார்பில் மிதித்து, குதித்து, திருநீற்றுத்துகள் எழும்படி புழுதிய பாடல் செய்தது. தந்தையின் சடைமுடியிலுள்ள கங்கை நீரில் மூழ்கித் திளைத்து விளையாடுகிறது. குமரனாகிய குழந்தை.

குழகனின் குறும்புகளையெல்லம் கூறி, அப்பெருமானைச் சுவாமிகள் வருக வருக என்று வரவேற்று வணங்கி மகிழ்கிறார்.

"மழவுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெந்துகில்
மடித்தலம் நனைப்ப அம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி எம்பிரான்
மார்பினிற் குரவை பாடி
முழவுமுதிர் துடியினிற் சிறு பறை முழங்கியனல்
மோலிநிர் பெய்தவித்து
முளைமதியை நெளியரவின் வாய்மடுத் திளமானின்
முதுபசிக் கறுகருத்தி

விழவு முதிர் செம்மேனி வெண்நீறு தூளெழ
மிகப்புழுதி யாட்டயர்ந்து
விரிசடைக் காட்டினின் திருவிழிகள் சேப்பமுழு
வெள்ளநீர்த் துளையம் ஆடிக்
குழவுமுதில் செவ்விப் பெருங்களி வரச்சிறு
குறும்புசெய் தவன் வருகவே
குரவுகமழ் தருகந்த புரியில் அருள் முடிகொண்ட
குமரகுரு பரன் வருகவே"...

## நிலவனுக்கு எச்சரிக்கை

பிறந்து பதினெட்டுத் திங்களான பாட்டுடைத் தலைவனோடு, விளையாட வருமாறு நிலவை, சாம பேத தான தண்டம் ஆகிய உபாயங்களில் அழைப்பதே அம் புலிப் பருவமாகும். பாடல் மூன்றில் நில வையும் குமரனையும் கவிஞர் ஒப்பீடு செய்கிறார். எச்சரிக்கையும் தருகிறார்.

முக்கண்ணன் ஆகிய சிவனின் மூன்று கண்களில் (கதிரவன், அக்னி, சந்திரன்) ஒன்றாகச் சந்திரன் இருக்க, முருகனோ சிவனின் நெற்றிக் கண்ணிலேயே உதித்தவனாவான்.

சந்திரனின் கலைகள் சிலநாள் குறையும். சிலநாள் நிறையும். ஆனால் முருகப் பெருமானோ ஒட்பமாகிய கலைகள் எல்லாம் நிறைந்தவனாக இருக்கின்றான்.

இரவில் திரிவதால் சந்திரன் இரவோன் ஈகின்றான். முருகப்பெருமானோ அடியவர் இரவினை (இரத்தல் அல்லது ஏற்கும் தொழிலை) ஒழித்தவனாவான்.

சந்திரன் தனது ஒளியினால் நிலத்திலுள்ள பயிர்களை வளரச் செய்கிறான். முருகனோ எல்லா உயிர்களையும் வாழச் செய்கின்றான்.

சந்திரன் அமுதத்தினைத் தேவர்களுக்குக் கொடுத்தான். முருகனோ தன் அடியவர்களுக்கு இம்மைப் பயனும் மறுமைப் பயனும் (புத்தி முத்தி) அளித்தான்.

அனைத்து உலகங்களையும் படைத்த ஆறுமுகன் அம்புலியைவிட மேம்பட்டவன் என்கிறார்.

சூரனைக் கிளையுடன் அழித்தான். பிரம னைக் குட்டிச் சிறையிலிட்டான். திசை மன்னர்கள் எண்மரையும் துன்புறச் செய்தான். சிறப்புமிகு முருகப்பெருமானுடன் விளையாட வரவில்லை எனில் பழைய கணக்குத் தொடரும் என்றும் அம்புலியை எச்சரிக்கை செய்கிறார் சுவாமிகள்.

## சிதைத்து அழிப்பவனா? சிரித்து அருள்பவனா?

சிறுமியர் மணலில் சிற்றில் எழும்பி விளையாடுவர், பதினேழு திங்கள் நிறைந்த வேளையில் நிகழ்வதான பருவமே சிற்றில் பருவமாகும். ஆண் குழந்தை அவர்கள் எழுப்பிய மணல் வீட்டினை அழிப்பர். அப்போது தங்களது வீட்டை அழிக்க வேண்டாம் என்று அச்சிறுமியர் கெஞ்சுவர்.

உமையன்னை முருகப் பெருமானை ஒப்பனை செய்து வீதியில் விளையாட அனுப்பி வைத்தாள். ஆயின் அவன் சிறுமிகளின் மணல் இல்லத்தைச் சிதைக்கச் செல்கிறான். சிதைக்கும் போது குழந்தையின் முடியிலும் அடியிலும் புழுதியாகும் என்பதுடன், அவ்வில்லில் உள்ள முத்தும் மணிகளும் அவனது திருவடிகளில் உறுத்தும். அதனால் தாய் உமை அன்னையின் கண்களில் உறுத்தல் ஏற்பட்டு வருத்துமே என்று பெண்



குழந்தைகள் வருந்துகின்றனர். அவர்களது வீடு நடுக் கடலில் உள்ள சூரபத்மனது மகேந்திர மலையோ அல்லது செல்வம் நிறைந்த கிரவுஞ்ச மலையோ அல்ல என்பதால் அவர்களின் சிற்றிலைச் சிதைக்க வேண்டாம் என்று சிறுமிகள் முருகனிடம் மன்றாடுகின்றனர். தந்தை சிவனோ அழித்தல் தொழிலைச் செய்பவன். அவன் ஈன்ற மதலையே முருகன். எனவே என் செய்வது? காக்க வேண்டிய அவனே எங்களை அழிக்கத் தொடங்கினால் எங்கள் கவலையை எவரிடம் உரைப்போம்? என்கின்றனர்.

கயல் விழியாளாகிய வள்ளியின் தினைப்புனத்தில் தேன் கலந்த தினை மாவு உண்டதையும், அவளது எச்சிலைத் தின்றதையும் பிறரிடம் சொல்லமாட்டோம் என்பதால் எங்களது சிறுவீடுகளை அழிக்க வேண்டாம் என்றும் கூறுகின்றனர்.





முருகப் பெருமானே உனது பேரருள் மழையினால் அண்டங்கள் யாவும் உண்டாயின. அம்மழையினால் ஏற்பட்ட வண்டல் மண் கொண்டு சிற்றில் அமைக்கின்றோம். இதனைச் சிதைப்பது படைப்புத் தொழிலுக்கு மாறான செயலாகும். எனவே தங்களது வீடுகளை அழிக்க வேண்டாம் என்று வேண்டுகின்றனர். இவ்வழகிய நிகழ்வுகளை முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் சிற்றில் பருவப் பாடல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றது.

## தாயைப் போல பிள்ளை

செம்மேனி எம் மானாகிய ஈசன், தீராத நோய் தீர்க்கும் வைத்தியநாதனின் தழல்வெம்மை உருவில்ஒரு பாதி குளிருமாறு ஒருபுறம் நின்றவளாகிய அன்னை தையல் நாயகி, குமரனைத் தம்மடியில் இருத்திக் கொஞ்சி மகிழ்ந்து, முத்தம் கொடுத்து உச்சி முகர்ந்து தாய்மையின் பேற்றினைக் காட்சியாக்குகிறாள். தனது கண்களில் பிரதிபலித்திடும் குமரனின் திரு உருவைச் சுட்டிக் காட்டி, அக்குழந்தையுடன் விளையாடுமாறு குமரனுக்குக் கூறி மகிழ்கிறாள் தாய். அருளுள்ளம் கொண்ட அன்னையின் மகன் அழிப்பவனாக இருக்க முடியுமா?

## நிறைவுரை

இறையன்பர்கள், தான் வேறு, இறைவன் வேறு, தனக்கு விருப்பங்கள் உண்டு. அவற்றை இறைவன் நிறைவேற்றுவான் என்று வேறு பாட்டு



செங்காலன், சென்மார்க்கிறெத்தன்
சுவிற்சர்லாந்து


ணர்ச்சிக்கு ஆட்படுவதில்லை. நமக்கு எது வேண்டுமென்பதை இறைவன் அறிவான். கேளாமலேயே தருவான். அவனோடு ஒன்றியமைந்த பிறகு நாம் விரும்புவதெல்லாம் கூட அவன் விருப்பமே யாகும் என்ற நிலை, மிகவுயர்ந்த இறுதி நிலையாகும்.

"வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே"

அவனருளாலே அவன்தாள் வணங்கிப் போற்றிடும் வகையில் சேயாய், தோழனாய், தொண்டனாய், நாயகியாய்த் தொழுதிடும் மார்க்கங்களில் ஒன்றின் வழியே உயிர்கள் இறைவனைச் சார்ந்து வாழ்ந்திடும் வகையினை அறிந்து உய்வுபெறல் வேண்டும் என்பதே சிற்றிலக்கியங்களின் நோக்கமாகும். குழகன் என்றாலே இளைஞன், கட்டழகன், முருகன், பிறர்க்கு இணங்குபவன் என்று பொருள் கூறப்படுகிறது. குழகுதல் என்றால் கொஞ்சி விளையாடுதல் என்றும் பொருள் சொல்லப்படுகின்றது. குழகனாகிய குமரன் குவலயத்தவர்களை வாழ்வாங்கு வாழ வைப்பான். நோவ உரையான். நோவரக்கண் பார்த்திரான், சாவ நினைப்பான், தளர விடான், அவன் தாள்களைப் பற்றி வாழ்வோம்.

**முனைவர் சீர்காழி வி. இராமதாஸ்**





# செங்காலன் சென்மார்க்கிறெத்தன் ஸ்ரீ கதிர்வேலாயுதர்



ஐந்து முகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும்

மேற்படி செய்யுளிள் குறிப்பிடப்படும் வேல் சென்மார்க்கிறெத்தனில் (செங்காலன்) கோயில் கொண்ட கதிர்வேலனை நினைத்து கதிர்வேலவனை மனதார வழிபட்டு திருமுருகாற்றுப்படையில் "உலகம் உவப்ப" என்று ஆரம்பித்து முருகனையும் அவரது திருக்கை யிலேந்திய வேலாயுதத்தையும், திருவாகனமாகிய மயிலையும் புகழ்ந்துரைத்து நக்கீரர் மாமுனிவர் பாடியதைக் காணமுடிகின்றது. ஆற்றுப்படை என்பது வழியையடைவதற்கு விளக்குவது என்பதே பொருளாகும்.



எவரொருவராகிலும் இப்பூவுல கத்தில் பிறந்து வளர்ந்து தனது இன்ப துன்பங்களை யெல்லாம் அனுபவித்துக் கழித்து அதனுடன் நின்று விடுபடவும், நற்கதியை அடையவும் தினமும் திரு முருகாற்றுப்படையில் கூறப்படும் ஆறு படைவீடுகள் எனக் கூறப்படும் மேலான அஷ்கரங்களைத் தினமும் பாராயணம் செய்வதால் நல்லபேறுகளைப் பெறுவார்கள் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை எனலாம்.

மேலும் முருகக் கடவுளை வழிபடு வோர் அவரின் திரு அம்சங்களாகிய கதிர்வேல், மயில், திருமுடி, முருகனின் புகழ் உரைக்கும் ஏடுகள், புத்தகங்கள் குறிப்பாகக் கந்தபுராணம், திருமுருகாற்றுப்படை, இவை களை வைத்து வழிபடுவதால் மேலான பேறுகளைப் பெறலாம். இப்படியெல்லாம் வழிபடுவதால் இளமை, அழகு, ஆயுள் மேலோங்கும், இடர்கள் அகலும், சர்வஐஸ் வர்யங்களும் கிடைக்கப்பெறும். வழிபடு வோர் இம்மையிலும், மறுமையிலும் இன் புற்று இருப்பார்கள். இதற்குச் சான்றாக,

"ஐந்து முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும்- நெஞ்சில்


ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்றுஓதுவார் முன்.''

என அமைவதை நோக்கலாம்.

இவ்வேளையில் சுவிஸ் மாநிலத்தில், செங்காலன் பகுதியில் சென்மார்க்கிறெத்தன் கிராமத்தில் முருகபக்தர்களால் உள்ளம் கவரப்பட்ட ஸ்ரீ கதிர்வேலாயுதர் திருக் கோயில் உற்பத்தியாகியது எல்லோரும் பெற்ற பெரும் பேறாகலாம். அத்துடன் ஆலயத்தைச் சிறந்தமுறையில் நிர்வகித்துத் தொண்டாற்றி வருகின்ற அடியார்களை மனதார வாழ்த்து வதில் குறைவிருக்காது. ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள "கதிர்வேல்" பற்றியும், சரணடைந்துள்ள திருவாகனமாகிய மயில் (வெள்ளை) பற்றியும் இரு பாக்களை ஆக்கியுள்ளோம்.

1. ''உலகெலாம் அழியினும் அழிவிலா ஒன்றதாய்
உள்ள பொருளாம்
உள்ளுவார் உள்ளத்தின் உள்ளே இருந்து
ஒளிகால விளக்காய்
முகமெலாம் ஆறுபடை மூர்த்தியாய் தீதாம்
மும்மல மிலவாய்
முனிபுங்கவர்கள் மூக்கெழ சென்மார்க்கிறெத்தன்
வேலாயுதர் காக்குக
துகளிலா தொனிந்திரு சுடர்விடுசோதியாய்
சூர்கிளை தொலைத்து
தோன்று குருதியில் நிலமெலாம்
ஆடிடத் துணைசெய் வேலே
சகமெலாம் துதித்திடச் சங்கரன் உவந்து
தந்த மைந்தன்
சாமி ஆறுமுகத் தோன் தன்னக
தாங் கெழில் கதிர்வேலே''

2.''வெள்ளைமயில்'' (சென்மார்க்கிறெத்தன்)
அடியார் என்றும் அன்பில் வணங்க
அணுகும் செம்மார்க்கிறெத்தன்
அண்ணல் ஆகிய ஆறுமுகத்தன்



ஆன அமுதன்
வடிவேற்கையன் வானநாடன்
வானவர்க் கதிபன்
வண்டுபண் செய்தீபம் அணிந்த
மார்பனைக் காப்பாய்
படியிலெழுந்து மால்வரை பறக்க
பரந்த தூசி
பரந்த ஏழ்கடல் படிந்து மூடிட
படர்ந்த சூரனை
தடிந்த போதிமைப் போதினில் முருகனை
தாங்கிவந்த
தனிப் பொற்கண்கள் ஆயிரம் கொண்ட
வெள்ளை மாமயிலே".

முதற் செய்யுளில் கூறப்படும் கதிர்வேலும், மறுசெய்யுளில் குறிப்பிடும் வெள்ளைமயிலும், கதிர்வேலவனின் திருவருளில் சென்மார்க்கி றெத்தனில் கோயில் கொண்டது போற்றுதற் குரியது எனலாம்.



கதிர்வேலாயுதர் ஆலயம் உற்பத்தியா கிய சில வருடங்களில் அதீத வளர்ச்சியடை வதும், அற்புத சித்திகளை ஆற்றிவருவதும், பக்தர்கள் வழிபாட்டில் காட்டும் ஆர்வமும் வருடாவருடம் நடைபெறவேண்டி உற்சவங் கள் மென்மேலும் சிறப்புற நடைபெற்று, வணங்கும் பக்தர்களின் குறைகள் தீரப் பாடுவது "வேலுண்டு வினைதீர்க்க, மயிலுண்டு குறைநீக்க", என்பது பொய்யாக வில்லை என உணர்த்துகின்றது.

வேலவனின் மகிமையை விளக்கில் முன்னொருகாலத்தில் ஓர் பூதம் தனக்கு உணவுக்காக அடியார்களைப் பிடித்து வந்து ஓர் குகைக்குள் அடைத்து அவர்களின் தொகை ஆயிரம் ஆனவுடன் உண்பது வழக்கமாக இருந்தது. இப்படியாகத் தொழாயிரத்து தொண்ஜ்ஞுற்றொன்பது அடியார்களைக் குகையில் அடைத்தபின் ஒருவர் குறைவதால் அவரைத் தேடித் திரியும் வேளையில் நக்கீரர் தினமும் செய்யும் பூசையில் சிறு தவறு செய்த காரணத்தை வைத்து குறித்த பூதம் நக்கீரரைப் பிடித்து வந்து தொளாயிரத்துத் தொண்ணுற் றொண்பது பேருடன் குகைக்குள் அடைத்தவு டன் அங்கு அடைக்கப்பட்டிருந்த அடியார் கள் அனைவரும் கதிகலங்கியவாறு இனி தாம் பூதத்திற்கு உணவாகப் போகின்றோமே. எமது தொகை பூதம் உண்பதற்குரிய ஆயிரம் ஆகிவிட்டதே என்று கதிகலங்கியவாறு முருகனைப் பலதரம் முருகா, முருகா, முருகா என்று ஓலமிட்டனர். இதேநேரம் நக்கீரர்

திருமுருகாற்றுப்படையை மனம் உருகி ஓதினார். ஓதி முடிவுறும் வேளையில் குகை யானது வெடித்துச் சிதறியது. உடனே அடைக் கப்பட்டிருந்த அனைவரும் உயிர்தப் பிப் பிழைத்ததாக வரலாறு கூறக் காணமுடி கின்றது.

எமக்கு நேரவுள்ள துன்பதுயரங்களை எல்லாம் போக்கி புகழ், செல்வம் இவற்றைத் தரவல்லது முருக வழிபாடும், முருக பாராயண மும் ஆகும். இல்லங்களில் திருமுருகாற்றுப் படையை ஓதுதல் சிறந்தது. முருகன் புகழ் கூறும் நூல்கள் "கந்தபுராணம்" போன்றவற்றை இல்லங்களில் வைத்திருப்பதும் சிறந்த பலன்களைத் தரலாம். "முருகன் குற்றம் பொறுக்கும் கடவுள்" என்று முன்னோர் கூறுவார்கள். முருகன் அதீத வல்லமை உடையவர். ஓர் காலத்தில் பிரம்ம தேவனிடத்தில் பிரணவத்தின் பொருளைக் கேட்ட பொழுது அதன் பொருள் கூறத் தெரியாமல் பிரம்மதேவன் தலையில் குட்டி அவரைத் தண்டித்ததாகப் புராண வழி மூலமாக அறிய முடிகின்றது. சகல வல்லமை களை உடைய முருகப்பெருமானையும், அவரது திருக்கரத்தில் உள்ள கதிர்வேலையும், வணங்குவதால் பெறுவதற்கரிய பெரும் பேறுகளையடையலாம் என்பது எனது கருத் தாகும்.

கதிர் வேலவனின் அடியார்களின் அன்பு வேண்டுதலுக்குப் பணிந்து சிறியோன் எனது தந்தையாராகிய கந்தரோடை (சுன்னாகம்) யைச் சேர்ந்த சிவத்திரு சின்னத்தம்பி (மதகுரு) அவர்களின் கற்பித்தலினால் கற்றுக்கொண்ட அருளுரைகளின் துணையைக் கொண்டு பெரும்பேறும் "கதிர்வேலவனின்" கருத்தினை வரைவதற்கு விளைந்தேன். அவை வரைவில் ஏதாவது வழு இருப்பின் கதிர்வேலவன் பொறுத்தருள வேண்டி அமைகின்றேன்.

*சிவத்திரு சின்னத்தம்பி பரம்சோதி,*
சுவிற்சர்லாந்து, குடியேற்ற உத்தியோகத்தர்,
(ஓய்வுபெற்ற) யோகபுரம், துணுக்காய், இலங்கை.





# நன்றி மலர்கள்



அனைத்துலக முருக பக்தி மாநாட்டின்போது ஆலயம் வெளியிட்டுள்ள சிறப்புமலருக்கு ஆசியுரை, வாழ்த்துச்செய்தி வழங்கியவர்களுக்கும், கருத்து மிக்கக் கட்டுரைகள், கவிதைகள் வழங்கிய பெருந்தகைகளுக்கும், சிறப்பு மலரை வெளியிட ஆதரவு வழங்கிய இம்போர்ட்தாஸ் உரிமையாளர் சிறிதாஸ் இளையதம்பி அவர்களுக்கும், மலரில் வெளியாகிய படங்களைச் சிறப்பாக வடிவமைத்துத்தந்த ஆர். ராகுலன் அவர்களுக்கும், திருமதி கலாசோதி செந்தில்நாதன் அவர்களுக்கும், மலரைச் சிறப்பாகத் தொகுத்த ஞானசுந்தரம் குகநாதன் (மூத்த ஊடகவியலாளர்), முனைவர் சீர்காழி வி. இராமதாஸ் ஆகியோ ருக்கும், மலரை அழகுடன் அச்சுப்பதித்த யாழ்ப்பாணம் கரிகணன் (தனியார்) நிறுவனத்திற்கும், எமது ஆலயத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.


**பரிபாலன சபையினர்**



சுவாமி மலை



பழமுதிர் சோலை



திருத்தணிகை

**வடிவமைப்பு & அச்சமைப்பு :**

**Harikanan**

Printers of the North
N0: 681, K.K.S. Road,
Jaffna, Sri Lanka.
T.P: 0094 21 222 2717
E-mail: print@harikanan.com
printeuro@harikanan.com

Subash™
Purity of Taste

தாயக,
ஆசிய, உணவுகளின்
நேரடி இறக்குமதியாளர்

IMPORTAS

CASH & CARRY

Baslerstrasse 102,8048 Zürich, Switzerland.

Tel : 043 343 03 55